
# TIRUVANAIKKA KOYIL VARALARU

R. PANCHANATHAM PILLAI

CONNEMARA PUBLIC LIBRARY
26 SEP 1956
MADRAS



யானை, சிலந்தி, அம்பிகை வழிபடுவது

KOYIL VARALARU
2 SEP 195

உ

# திருவானைக்கா கோயில் வரலாறு

ஷை தேவஸ்தானம் கௌரவ தர்மகர்த்தர்கள்

**திரு. சா.ராம.சித. பழனியப்பச் செட்டியார் அவர்கள்**

(மானேஜிங் டிரஸ்டி)

**திரு. C. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்**

**திரு. C. நமசிவாயம் பிள்ளை அவர்கள்**

நிர்வாக அதிகாரி

**திரு. வெ. ரங்கராஜா அவர்கள்**

ஆகியோர்களால் வெளியிடப்பெற்றது.

★


திருச்சி உறையூர் M. M. பெண்கள் உயர்நிலைப்பள்ளி
தமிழ் ஆசிரியரும்,
H. R. & C. E. ஆதரவில் பல கோயில் வரலாறுகளை
இயற்றியவரும் ஆகிய
**திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்களால்**
எழுதப்பெற்றது.

மூன்றாம் பதிப்பு.

திருச்சிராப்பள்ளி யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட்,
திருச்சிராப்பள்ளி.
1952

உரிமை செய்யப்பெற்றது.]

[விலை 8 அணா



சா. ராம. சித. சிதம்பரம் ஐயா அவர்கள்
ஆதி திருப்பணியாளர்

2 6 SEP 1954

# முகவுரை

மக்கள் நன்னிலை அடைவதற்குச் சமய வாழ்க்கை இன்றியமையாதது. அவ்வாழ்க்கைக்குக் கடவுள் வழிபாடே அடிப்படை ஆகும். கடவுளை எங்கிருந்தும் வழிபடலாம், ஆயினும் ஆன்றோர்கள் அருள்பெற்ற ஆலயங்களே கடவுள் வழிபாட்டிற்குச் சிறந்த இடங்களாகும் இதுபற்றியே ஔவையாரும் 'ஆலயந் தொழுவது சாலவும் நன்று' என்று கூறியுள்ளார். தமிழ் நாட்டில் மக்கள் வழிபடுவதற்குரிய ஆலயங்கள் பல உள்ளன. அவற்றுள் திருவானைக்கா என்னும் தலம் மிகவும் சிறந்ததாகும். இத்தலத்திற்கு வடமொழியில் ஒரு மஹாத்மியம் உண்டு தமிழ் மொழியில் ஓர் புராணமும், பல பிரபந்தங்களும் உள்ளன. ஸ்ரீ கச்சியப்ப முனிவர் இயற்றிய திருவானைக்காப் புராணத்தைத் தழுவி இவ் வரலாறு எழுதப்பெற்றுள்ளது,

சென்னை இந்து சமய அறநிலையப் பாதுகாப்புக் கழகம் (Hindu Religious & Charitable Endowments) அனுப்பியுள்ள சுற்றறிக்கையைக் கொண்டு இவ் வரலாறு சுருக்கமாக எளிய நடையில் எழுதப்பெற்றுள்ளது. இக் கோயிலைப்பற்றிய தேவாரம் முதலிய பாடல்களும், மற்றும் சில பிரபந்தச் செய்யுட்களும் பின்னே சேர்க்கப்பெற்றுள்ளன. திருச்சி தமிழ் ஆசிரியர் திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்கள் இவ் வரலாற்றை அன்புடன் எழுதி உதவினார்கள். முன் பதிப்புப் பிரதிகள் செலவாயினமையால் புதிய சேர்க்கைகளுடன் 3-ம் பதிப்பாக இது வெளிவருகின்றது. இப்பதிப்பில் புராணத்தின் சில வரலாறுகள், ஜம்புநாத அஷ்டகப் பாடல்கள், முற்காலத் திருப்பணிகள் முதலியவை புதிதாகச் சேர்க்கப் பெற்றுள்ளன. அன்பர்கள் படித்து அண்ணலாரின் திருவருளைப் பெறுக.

திருவானைக்கா
தேவஸ்தானம்
4—9—52

வெ. ரங்கராஜா.
நிர்வாக அதிகாரி.

# உள்ளுறை


| | | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 1. | தலமும் இருப்பிடமும் | ... | ... | 4 |
| 2. | தலத்தின் வேறு பெயர்கள் | ... | ... | 6 |
| 3. | கோயிலின் அமைப்பு | ... | ... | 6 |
| 4. | மூர்த்திகளின் பெயர்கள் | ... | ... | 8 |
| 5. | தீர்த்தங்கள் | ... | ... | 8 |
| 6. | தலப் பெருமைகள் | ... | ... | 11 |
| 7. | சுற்றுக் கோயில்கள் | ... | ... | 12 |
| 8. | சிற்பச் சிறப்புகள் | ... | ... | 14 |
| 9. | திருப்பணிகள் | ... | ... | 15 |
| | (1) பிற திருப்பணிகள் | ... | ... | 18 |
| | (2) புராதனத் திருப்பணிகள் | ... | ... | 20 |
| 10. | மடங்கள், சத்திரங்கள் முதலியன | | ... | 23 |
| 11. | வழிபட்டோர் | ... | ... | 24 |
| 12. | தினப் பூஜைகள் | ... | ... | 24 |
| 13. | திருவிழாக்கள் | ... | ... | 25 |
| 14. | புராண வரலாறுகள் | ... | ... | 28 |
| | (1) யானையும் சிலந்தியும் வழிபட்டது | | ... | 29 |
| | (2) சம்பு முனிவர் தவஞ் செய்தது | | ... | 32 |
| | (3) பஞ்சப்பிரகார வரலாறு | | ... | 33 |
| | (4) அம்பிகை உபதேசம் பெற்றது | | ... | 35 |
| | (5) இராமர் வழிபட்டது | ... | ... | 37 |
| | (6) பெருமான் முத்தாரம்பூண்டது | | ... | 39 |
| | (7) திருநீற்றுமதில் வரலாறு | ... | ... | 41 |
| | (8) பெருமான் முறைசெய்தது | ... | ... | 42 |
| 15. | சரித்திர வரலாறு | ... | ... | 42 |
| 16 | கல்வெட்டுக்கள் | ... | ... | 43 |
| 17. | வருமானம், சொத்துக்கள் முதலியன | | ... | 50 |
| 18. | நிர்வாகம் | ... | ... | 51 |
| 19. | இலக்கியங்கள், தேவாரமும், தனிப்பாடல்களும் | | | 52 |
| 20. | தனி நூல்கள் | ... | ... | 57 |

2 h SEP 1958

# HISTORY OF THE TEMPLE

"Srirangam contains a second great temple in the Siva shrine in Tiruvanaikaval or Jambukeswaram. This building surpasses the larger Vishnu temple in architectural beauty. It comprises five enclosures. The outermost of these contains streets and houses. The next or fourth is surrounded by a wall 35 feet high and 6 feet thick and measures 2436 feet by 1493. In this stands a mantapam supported on nearly 800 pillars and a tank fed by a perpetual spring which is surrounded by over a hundred pillars. In the next enclosure is a beautiful portico of cruciform shape leading upto the door of the sanctuary. In the same enclosure grows a tope of cocoanuts to which the image from the great Vishnu Pagoda was formerly brought for one day in the year. This practice has been given up owing to quarrels between the Saivites and the Vaishnavites.

The name Jambukeswaram is derived from Jambu, the sanskrit name for the naval tree and Iswara and is applied to the God of this temple because the image is placed under a Jambu tree which is much venerated and is said to be many hundred years old. The name Thiruvanaikaval is said locally to mean the **'tope of the holy elephant'**. It is said to be derived from the story that a spider and elephant both worshipped the lingam

under the Jambu tree, the former by spinning its web over the stone and the latter by pouring water over it. The elephant's operations naturally ruined the spider's work and the insect became so annoyed that it crawled up the elephant's trunk, caused the animal much pain and declined to come down until the saint **Saramamuni** of the Trichinopoly Rock came and reconciled the antagonists.

The temple is of great sanctity since it contains the appu (water) lingam which is one of the five elemental lingams held sacred throughout Southern India. As a matter of fact when the cauvery or Coloroon is in flood, water percolates through and surrounds the lingam with a little pool and many suppose that this is the origin of the names for the lingams. In the building are several inscriptions of the Hoysalas."

*(Trichinopoly District Gazetteer)*

---

"This temple is now called Jambukesvara, Tiruvanaikkaval or Tiruvanaikoyil. The first of these three names means "(the image of) Isvara (i. e. Siva) (under) the Jambu (tree)" and the two others are corruptions of the ancient name of the locality viz, Tiruvanaikka "The Sacred elephant grove." The full designation of the god, as used in the inscriptions, is "The Lord of the

sacred elephant grove, alias the Lord of the three worlds, who is pleased to reside gladly under the shade of the Sacred white jambu tree (tiru-ven-naval)". This name and the modern name Jambu-kesvara refer to an ancient legend. " In a grove near the Chandratirtha in the chola country, a linga of Siva made its appearance under a white jumbu tree (Vennaval). This was daily worshipped by a white elephant. Therefore the place received the name " The Sacred elephant grove " (Tiruva-naikka). Over the linga, a spider constructed a canopy in order to prevent dry leaves from dropping on the linga. When the elephant saw the cobwebs, he tore them down, because he considered them out of place. The Spider became angry, crawled into the trunk of the elephant and bit it. The animal dashed his trunk on the ground and died. So did the spider. In due course, the spider was reborn as the son of the Chola king Subhadeva and his queen Kamalavati. The boy received the name Ko-Senkannan i. e. "King of the Red eye." and inherited his father's kingdom. He possessed the faculty of remembering his former births, and constructed a temple of Siva near the white jambu tree in the sacred elephant grove, where he, as a spider, had formerly worshipped the linga."

*(S. I. E. Reports.)*

2 FEB 1959

உ

# திருவானைக்கா கோயில் வரலாறு

" வானைக்காவில் வெண்மதி மல்குபுல்கு வார்சடைத்
தேனைக்காவில் இன்மொழித் தேவிபாக மாயினான்
ஆனைக்காவில் அண்ணலை அபயமாக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவார்க் கேதும் ஏதம் இல்லையே "

## 1. தலமும் இருப்பிடமும்

அத்தி (யானை) முதல் எறும்பு ஈறான உயிர் அத்தனைக்கும் சித்தம் மகிழ்ந்தளிக்கும் தேசிகனும், ஆதி அந்தங்கடந்த பரம்பொருளும், ஆளான அடியவர்க்கு அன்பனும், அடியார்க்குறுதுயரந் தவிர்ப்பானும், கல்லாதார்மனத் தணுகாக் கடவுளும், கற்றார்கள் உற்றோருங் காதலானும், எங்கேனும் யாதாய்ப் பிறந்திடினும் தன்னடியார்க் கிங்கே என்றருள் புரியும் பெருமானும், அன்பர்களின் அகத்தாமரையில் வீற்றிருக்கும் அண்ணலும், பொன்னும் மெய்ப்பொருளும் தருவானும், போகமும் திருவும் புணர்ப்பானும், உலகேழும் ஈன்றருளி அனைத்தினுக்கும் காரணமாய் நின்றானும், அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய் விளங்குவோனும், அன்றும் இன்றும் என்றும் உள்ள மெய்ப்பொருளும் ஆகிய இறைவன் உலகத்திலுள்ள உயிர்கள் துன்பம் நீங்கி இன்பம் பெற்றுய்யும் வண்ணம், அவ்வுயிர்கள் மேல் வைத்துள்ள பெருங் கருணையால் தன் அருவத் தன்மையை மாற்றி இந்நில உலகத்தில் ஆங்காங்குள்ள பல கோவில்களில் உருவத் திருமேனிகொண்டு எழுந்தருளியிருந்து அருள் செய்து வருகின்றான்.

பெறுதற்கரிய மக்கட் பிறப்பைப் பெற்ற மக்கள் தம்மைச் சூழ்ந்துள்ள பாசங்களை நீக்கித் தலைவனையறிந்து வழிபடுதலே சிறந்த கடமையாம். "மானிடப் பிறவி தான் வகுத்தது மனம்வாக்காய, வானிடத் தைந்துமாடும் அரன்பணிக்காக அன்றோ" என்று ஆன்றோரும் வற் புறுத்தி யுள்ளனர். அவ்வாறு இறைவனை வழிபடுதற்கு ஆன்றோர்கள் தொன்று தொட்டு வணங்கி வந்த அருள் நிறைந்த ஆலயங்களே சீரிய இடங்களாகும்.

"மந்திரத்தின் வந்துதித்து மிகுஞ் சுரபிக் கெங்கும் உருக்காண வொண்ணாத பால்முலைப்பால் விம்மி ஒழுகுவது போல் வெளிப்பட்டு அருளுவன் அன்பர்க்கே" என்றவாறு பசுவின் உடல் முழுவதும் பால் மறைந்திருந்தபோதிலும் மடியின் மூலமாகவே பால் தோன்றுவது போல, இறை வன் எங்கும் வியாபித்திருந்த போதிலும் ஆன்றோர்கள் அமைத்த ஆலயங்களில் உள்ள மூர்த்திகளின் மூலமாகவே இறைவன் அன்பர்களுக்கு அருள் புரிவான்.

தமிழ் நாட்டில் ஆன்றோர்கள் அமைத்த அத்தகைய சிவாலயங்கள் 274 உள்ளன. அவற்றுள் என்றும் வற்றாத புனலுடைய - கங்கையிற் புனிதமாய காவிரி பாயும் சோழ நாட்டில், காவிரிக்கு வடகரையில் உள்ள பல தலங்களில், காவிரி, கொள்ளிடம் என்னும் இரு நதிகளுக்கும் இடையில், அரங்கம் என்று சொல்லப்படுகின்ற ஆற்றிடைக் குறையில் உள்ள இரு கண்கள் போன்ற இரு திருப்பதி களுள், கீழ்த்திசையில் சோலைகளுக்கு நடுவே திருவானைக்கா என்னும் சிறந்த தலம் உள்ளது. இதன் தெற்கே காவிரியும், வடக்கே கொள்ளிடமும், கிழக்கே திருவளர்சோலை என் னும் கிராமமும், மேற்கே ஸ்ரீரங்கப்பதியும் உள்ளன. இத்தலம் திருச்சி கோட்டை ரயில்வே ஸ்டேஷனிலிருந்து

காவிரிக்கு வடக்கே 2½ மைலிலும், ஸ்ரீரங்கம் ஸ்டேஷனி லிருந்து கிழக்கே ½ மைலிலும் உள்ளது.

## 2. தலத்தின் வேறு பெயர்கள்

திருவானைக்கா என்னும் இத்தலம் திருவானைக்காவல், கஜாரண்யம், ஜம்புகேசுவரம், ஜம்புவீச்சரம், வெண் நாவல்வனம், சம்புவனம், ஞானக்ஷேத்திரம், ஞான தலம், ஞானபூமி, காவை, தந்திபுகா வாயில், அமுதேசுவரம், தந்திவனம், இபவனம் எனவும் பெயர்பெறும்.

யானைக்கு அருள் புரிந்தமையால் திருவானைக்கா, திருவானைக்காவல் என்றும், யானை வதிந்த காடு என்னும் பொருளில் கஜாரண்யம், இபவனம், தந்திவனம் என்றும், (Tope of holy elephant) வெண்நாவல் மரத்தின் கீழ் பெருமான் வீற்றிருப்பதால் ஜம்புகேசுவரம், ஜம்புவீச்சரம், வெண்நாவல் வனம், சம்புவனம் என்றும், அம்பிகை இறைவனிடம் ஞான உபதேசம் பெற்ற காரணத்தால் ஞான க்ஷேத்திரம், ஞானதலம், ஞானபூமி என்றும், நல்ல சோலையை உடையதால் காவை என்றும், யானை புகாதபடி கட்டப்பட்டதால் தந்திபுகா வாயில் என்றும், அமுதமாகிய நீரினால் திரட்டி அமைத்த மூர்த்தி எழுந்தருளியிருப்பதால் அமுதேசுவரம் என்றும், பஞ்ச பூதத் தலங்களுள் நீரினால் அமைந்ததால் அப்புத் தலம் என்றும் பெயர்கள் வழங்கும்.

## 3. கோயிலின் அமைப்பு

இத்தலம் சோலைகளுக்கு நடுவில் அழகாக அமைந் துள்ளது. சுவாமி சந்நிதி மேற்கு முகமாயும், அம்மன் சந்நிதி கிழக்கு முகமாயும் அமைந்துள்ளன. அம்மன் கோயிலில் இரண்டு பிரகாரங்கள் உள்ளன. கோயில்

சுமார் 2500 அடி நீளமும், 1500 அடி அகலமும் உள்ளது. உள்ளே யிருந்து வெளி வீதி வரையில் பஞ்சப் (ஐந்து) பிரகாரங்களை உடையது. பஞ்சப்பிரகார உத்ஸவத்தின் போது உற்சவ மூர்த்திகள் இந்த ஐந்து பிரகாரங்களிலும் எழுந்தருளிக் காட்சி கொடுப்பர். 4-வது 5-வது பிரகாரங் களில் வீடுகள் நிறைந்துள்ளன. 4-வது பிரகாரத்தில் திருவிழாக் காலங்களில் உற்சவமூர்த்திகள் புறப்பாடும், தேரோட்டமும் நடைபெறும். இத்தலத்தைச் சூழ்ந்துள்ள பல மதில்களுள் நான்காவது மதில் மிகப் பெரியது. இது திருநீற்று மதில் எனவும் சொல்லப்படுகின்றது. இது 35 அடி உயரமும் 6 அடி கனமும் உடையதாகிக் கிழமேலில் 2,436 அடியும், தென்வடலில் 1,493 அடியும் கொண் டுள்ளது. இதன் முன் கோபுரத்தில் நரசிம்ம பல்லவனது அடையாளமான சிங்கத் தூண்களைக் காணலாம். கோ விலுக்குள்ளே பல தீர்த்தங்களும், பல சந்நிதிகளும், பல அடுக்கு மண்டபங்களும், வேறு பெரிய மண்டபங்களும், தென்னந்தோப்புக்களும் உள்ளன. இத்தலத்துப் பெரு மானைத் தரிசிப்பதற்காகவே ரங்கநாதர் ஸ்ரீரங்கத்தில் எழுந் தருளியிருப்பதாக கஜாரண்ய க்ஷேத்திர மகாத்மியம் கூறு கிறது. அதற்கேற்ப வருடத்தில் ஒரு நாளில் பெருமாள் ஸ்ரீரங்கத்திலிருந்து உறையூருக்கு வருவது போலவே, இவ் விடத்திலுள்ள ஒரு தோப்பில் பெருமாள் புறப்பட்டு வந்து தங்கி இருந்து அன்றிரவு விசேஷ அலங்காரத்துடன் திரும்பு வது வழக்கம். பிற்காலத்தில் இருதிறத்தார்க்கும் ஏற் பட்ட சமயச் சச்சரவினால் இவ்வழக்கம் நின்றுபோன தாகத் தெரிகிறது. இத்தோப்பில் ஓர் புதிய குளம் வெட் டப்பட்டுள்ளது.

## 4. மூர்த்திகளின் பெயர்கள்

இத்தலத்தில் எழுந்தருளிய இறைவருக்கு ஜம்புகேசுவரர் என்று பெயர். ஜம்புநாதர், சம்பு நாயகர், வெண்ணுவலீசர், ஜம்புலிங்கம், அப்புலிங்கம், அமுதலிங்கம், அமுதேசுவரர், பிரமலிங்கம், பிரமீசர். கஜாரண்ய நாதர், பச்சாதாபேசுவரர், ஆதிப்பெருஞ் செல்வர், சங்கரேசுவரர் முதலிய பெயர்களும் வழங்கும். அப்பர் சுவாமிகள் "செழு நீர்த்திரள்" என்று பெருமானைப் போற்றியுள்ளார்.

இறைவிக்கு அகிலாண்டேசுவரி, அகிலாண்ட நாயகி, அகிலாண்ட வல்லி என்னும் திருநாமங்கள் வழங்கப் பெறுகின்றன. அண்டங்கள் எல்லாவற்றிற்கும் தலைவி என்று பொருள்படும்.

## 5. தீர்த்தங்கள்

இத்தலத்திற்கு வடக்கில் கொள்ளிட நதியும், தெற்கில் திருமஞ்சனக் காவேரியும், காவிரி நதியும் உள்ளன. கொள்ளிடம், திருமஞ்சனக் காவேரி இவ்விரண்டு நதிகளிலிருந்தும் அபிஷேகத்துக்காக நீர் கொண்டுவரப்படுகிறது. இவையன்றிக் கோவிலைச் சேர்ந்த நவ தீர்த்தங்கள் உள்ளன. அவையாவன ;—

"காமரு பிரமதீர்த்தம் இந்திர புட்கரணியே சம்பு புட்கரணி
தேமலி யிராமதீர்த்தமே சீமத் தீர்த்தமே யக்கினி தீர்த்த
மாம கத்தியநற்றீர்த்தமே சோம தீர்த்தமே யலரியின் தீர்த்தம்
வாம மேகலையாய்மேலவாந் தீர்த்த மருவிய பெயரிவை காண்டி"

**1. பிரம தீர்த்தம்.** இது தெற்கு 4-ம் பிரகாரத்தில் சாலைக்குத் தென்புறம் உள்ளது.

**2. இந்திர தீர்த்தம்.** இது 3-ம் பிரகாரத்தில் தென் மேற்கில் காசி விசுவநாதர் சந்நிதிக்குப் பக்கத்தில் உள்ளது.

**3. சம்பு தீர்த்தம்.** இது 3-ம் பிரகாரத்துக்குக் கிழக்கில் பழைய ஜம்புகேசுவரர் கோவிலுக்குப் பக்கத்தில் உள்ளது.

**4. இராம தீர்த்தம்.** இது 5-ம் பிரகாரத்துக்கு வெளியே சந்நிதிக்கு மேற்கில் உள்ள தெப்பக்குளம் ஆகும். இதில் தைமாதத்தில் புனர்பூச நட்சத்திரத்தில் தெப்பத் திருவிழா நடைபெறும்.

**5. ஸ்ரீமத் தீர்த்தம்.** இது மூல லிங்கத்துக்கு அருகில் சிற்றாறலாக உள்ளது.

**6. அக்கினி தீர்த்தம்.** இது 3-ம் பிரகாரத்தில் தென் கிழக்கில் வசந்த மண்டபத்திற்குப் பக்கத்தில் உள்ள பெரிய கிணறாகும்.

**7. அகத்திய தீர்த்தம்.** இது அம்மன் கோவிலில் முதல் பிரகாரத்தில் சந்நிதிக்கு எதிரில் பள்ளியறைக்குப் பக்கத்தில் உள்ள சிறிய கேணியாகும்.

**8. சோம தீர்த்தம்.** இது ஸ்ரீரங்கத்தில் உள்ள சந்திர புட்கரணி என்று சொல்லப்படுகிறது.

**9. சூரிய தீர்த்தம்.** இது 4-ம் பிரகாரத்தில் தென் மேற்கு மூலையில் ஆயிரக்கால் மண்டபத்திற்கு எதிரில் உள்ள தெப்பக்குளம் ஆகும். இதைச் சுற்றிலும் சுமார் 100 கால்களைக்கொண்ட இரண்டடுக்கு வரிசை மண்டபம் உள்ளது. இதில் ஆடி மாதம் பூர நட்சத்திரத் தினத்தில் தெப்பத் திருவிழா நடைபெறும்.

## மேல்கண்ட தீர்த்தங்களின் புராணப் பெருமைகள்

| நெ. | தீர்த்தம் | மரம் | முனிவர் அல்லது ரிஷி | காவலர் | தெய்வம் | தானப் பொருள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | பிரம தீர்த்தம் | தேமா | பிரமதேவன் | புஷ்பதந்தன் | சங்கரன் | திலம் (எள்) |
| 2 | இந்திர தீர்த்தம் | தென்னை | இந்திரன் | கும்போதரன் | பரமசிவன் | பசு நெய் |
| 3 | சம்பு தீர்த்தம் | நாவல் | வசிட்டன் | சுனந்தர் | மயேச்சுரன் | கோதுமை |
| 4 | இராம தீர்த்தம் | இலுப்பை | இராமன் | வீரபத்திரன் | நீலஹரீஸ்வரர் | வெல்லம் |
| 5 | ஸ்ரீமத் தீர்த்தம் | நாவல் | கார்க்கியர் | சுதந்தன் | அமுதேசர் | சிவலிங்கம் |
| 6 | அக்கினி தீர்த்தம் | புளி | அக்கினி | ககுபன் | கிரிசானுரேதசு | நெல் |
| 7 | அகத்திய தீர்த்தம் | பலா | அகத்தியர் | சுருததி | அகிலாண்டவல்லி | வெ. வஸ்திரம் |
| 8 | சந்திர தீர்த்தம் | புன்னை | சந்திரன் | புஷ்கரன்<br>புஷ்கராக்ஷன்<br>குமுதன் | சந்திரன் | பொன் |
| 9 | சூரிய தீர்த்தம் | வில்வம் | பிருகு | வைரவன் | சூரியன் | இரத்தினம் |

## 6. தலப் பெருமைகள்

இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றினும் விசேட மகிமை உடையது. பஞ்சபூதத் தலங்களுள் இது அப்புத்தலம். மற்றவை, பிருதிவி - திருவாரூர், தேயு - திருவண்ணாமலை, வாயு - காளத்தி, ஆகாயம் - சிதம்பரம் ஆகும். ஆறு ஆதாரத் தலங்களுள் **இது சுவாதிஷ்டானத் தலம்.** அம்பிகை நீரால் அமைத்த மூர்த்தியைக்கொண்ட கோயில்; '**செழுநீர்த்திரள்**' என்று அப்பர் சுவாமிகளால் பாடப்பெற்றது. மூல லிங்கத்தில் இன்றும் நீர் ஊறுவதைக் காணலாம். சத்திக்குரிய தலங்களுள் ஒன்று. யானையும் சிலந்தியும் போட்டியிட்டுப் பூஜித்த கோயில். யானை புகாதபடி கட்டிய மாடக்கோயில்களுள் முதன்மையானது. இறைவனே சித்தராக எழுந்தருளி வந்து திருநீற்றைக் கூலியாகக் கொடுத்துக் கட்டப்பெற்ற திருநீற்றுமதில் என்னும் சிறந்த மதிலைக்கொண்டது. இம்மதிலை வலம் வருவோர் மகப்பேறு, செல்வம், வெற்றி, இன்பம் முதலியவைகளைப் பெறுவர். சோழன் ஒருவன் காவிரி நதியில் நீராடும்போது அவன் கழுத்தில் அணிந்த முத்து மாலை காவிரியில் தவறி விழ, அம்மாலை திருமஞ்சனக் குடத்தின் மூலமாக இறைவன் கழுத்தில் வரப்பெற்றது. சுவாமி சந்நிதிக்கு முன் ஒன்பது துவாரங்களைக் கொண்ட ஒரு பலகணி உண்டு. இதன் மூலமாக இறைவனைத் தரிசித்தால் நவ தீர்த்தங்களினும் நீராடிய பலனைப் பெறுவர். பிரமோற்சவம் என்பது இத்தலத்துக்கே பொருந்தும். பிரமனால் 40 நாள் வரையில் நடத்திய மண்டலோற்சவம் ஆகும். பஞ்சப்பிரகாரம் என்னும் சிறந்த திருவிழாவைக் கொண்டது. பிற கோயில்களில் நிகழும் திருக்கல்யாண மகோற்சவம் இங்கு நடைபெறுவதில்லை. **தினமும் கோ பூஜை நிகழ்கின்றது.** சுவாமிக்குத் தினந்தோறும் அன்னாபி

ஷேகம் உண்டு. சந்நிதியில் உள்ள கொடித்தூணை யல்லாமல் 3-ம் பிரகாரத்தில் சுற்றிலும் அட்ட (எட்டுக்) கொடிகளையுடையது. பிற கோயில்களைப்போல் அல்லாமல் 6-ம் திருநாள் அன்று தேர் ஓட்டம் நடைபெறும். மார்கழித் திருவாதிரையில் நடராஜமூர்த்தி அறுபத்துமூவருடன் புறப்படும். **உச்சிக்காலப் பூஜையின்போது அம்மன் கோயில் அர்ச்சகர் பெண் வேடந்தரித்து இறைவனைப் பூஜிப்பார்.** 3-ம் பிரகாரத்தில் ஜேஷ்டாதேவியின் சந்நிதி உள்ளது. ஆதிசங்கராச்சாரிய சுவாமிகளால் அம்பிகைக்குத் தாடங்கப் பிரதிட்டை செய்யப்பெற்றது. காளமேகப் புலவர் அம்பிகையின் அருள்பெற்ற பெருமையுடையது. நாவல் மரத்தைத் தலவிருட்சமாகக்கொண்டது. நிறைந்த கல்வெட்டுச் செய்திகளையுடையது. சமய குரவர்களால் பதிகம் பாடப்பெற்ற சிறப்புடையது. அழகிய திருப்பணிகள் நிறையப்பெற்றது. இத்தலத்தில் அம்மன் சந்நிதியில் திருமணங்கள் நடைபெற்று வருகின்றன. அதற்கேற்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. சந்நிதிகள் காலை முதல் அர்த்தசாமம் வரையில் எப்போதும் திறக்கப் பெற்றிருக்கும். சோலைகளுக்கு மத்தியில் இருப்பதால் கோடைக் காலத்தில் இவ்விடம் குளிர்ச்சியாய் இருக்கும்.

## 7. சுற்றுக் கோயில்கள்.

இக்கோயிலைச் சேர்ந்த சுற்றுக் கோயில்களாக உள்ளவை :—

1. **இராஜராஜேசுவரர் கோவில் :—**இது 4-ம் பிரகாரத்தில் வடக்குத் தெருவில் உள்ளது. இக்கோயிலில் உள்ள மூல லிங்கம் ஐந்து முகங்களையுடையதாய்ப் பஞ்சமுகலிங்கம் என வழங்குகின்றது. ஐந்து முகங்களாவன :—

ஈசானம்,[1] தத்புருஷம்,[2] அகோரம்,[3] வாமதேவம்,[4] ஸத்யோ ஜாதம்[5] என்பன. இக்கோயிலின் கோபுரத்தில் ஹொய்சல மன்னனான பிரதாப சக்கரவர்த்தி வீர ராமநாதனால் ஏற்படுத்தப்பட்ட சிதைந்துபோன கல்வெட்டு உள்ளது.

2. **நீலவிண்டீசுவரர் கோவில்:—**இது கோயிலுக்கு மேற்கே உள்ள இராமதீர்த்தத்துக்கு மேற்கில் இராமரால் பிரதிட்டை செய்யப்பட்டது. நீல நிறத்தையுடைய திருமாலாகிய இராமரால் பூசனை செய்யப்பட்டதால் இப்பெயர் பெற்றது.

3. **சங்கரேசுவரர் கோவில்:—**இது 3-ம் பிரகாரத்தில் கீழ்த்திசையில் சம்புதீர்த்தத்துக்குப் பக்கத்தில் உள்ளது. பழைய ஜம்புகேசுவரம் என்றும் சொல்லப்படும். இதற்கும் நான்குகாலப் பூஜைகள் உண்டு.

4. **பிடாரி கோவில்:—**இது 5-ம் பிரகாரத்தில் தென் கிழக்கு மூலையில் உள்ளது.

5. **வீரபத்திரசாமி கோவில்:—**இது 5-ம் பிரகாரத்தில் தென்மேற்கில் உள்ளது.

6. **சுப்பிரமணிய சுவாமி கோவில்:—**இது பெரிய கோயிலுக்குத் தென் திசையில் கொண்டயம்பேட்டையில் உள்ளது.


இவையல்லாமல் பெரிய கோயிலுக்குள்ளேயே சுவாமி சந்நிதி, அம்மன் சந்நிதிகளைத் தவிர்த்து, மும்மூர்த்தி கோயில், காசிவிஸ்வநாதர் கோயில், மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில், பாலதண்டாயுதபாணி கோயில், சனீஸ்வரர் கோயில், விநாயகர் கோயில் முதலிய உட்கோயில்களும் உள்ளன.

## 8. சிற்பச் சிறப்புக்கள்


தென்னாட்டுக் கோயில்கள் கற் சிற்பத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. சோழ நாட்டில் திருச்சி ஜில்லாவில் உள்ள கோயில்களுள் இக்கோயில் கற் சிற்பத்தில் சிறந்து விளங்குகிறது. பழமையும் புதுமையும் ஆகிய சிற்பங்களைக் காணலாம். (This Building surpasses the larger Vishnu temple in architectural beauty. *Trichy Dt. Gazetteer*) கோயிலுக்குள்ளே சிற்பங்கள் நிறைந்த பல மண்டபங்கள் உள்ளன. அவை ஊஞ்சல் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், வசந்த மண்டபம், நவராத்திரி மண்டபம், துவஜஸ்தம்ப மண்டபம், சோமாஸ்கந்தர் மண்டபம், நடராஜர் மண்டபம், மும்மூர்த்தி மண்டபம் முதலியனவாம். நூற்றெட்டுக்கால் மண்டபங்களில் இரண்டு மண்டபங்கள் உள்ளன. ஆயிரக்கால் மண்டபத்தில் நடுமண்டபம் தேர்போல் அமைக்கப்பட்டுத் தூண்களில் பல சிற்பங்களும், தேர்ச் சக்கரங்களும், குதிரைகளும் உள்ளன.

இவைகளுள் சோமாஸ்கந்தர் மண்டபம் பழமையான சிற்பத்திறனை விளக்கி நிற்கிறது. இது இராமரால் அமைக்கப் பெற்றதாகச் சொல்லப்படுகிறது. இதில் உள்ள கற்கொடுங்கைகள் மரவேலைகளைப் போலப் பட்டை வைத்துச் செய்யப்பட்டுள்ளன. இத்தலத்தில் மூல லிங்கத்தின் கர்ப்பக்கிரகம் யானை புகாதபடி சிறியதாக அமைக்கப்பட்டுள்ளது. சந்நிதிக்கு முன் உள்ள 9 துவாரங்களைக்கொண்ட கல் பலகணி மூலமாய்த் தரிசனம் செய்து வருகிறார்கள். மூல மூர்த்திகளின் விமானங்கள் கல்லினாலேயே அமைக்கப்பட்டுள்ளன. அம்மன் கோயில் முற்றும் சலவைக் கற்களாலேயே கட்டப்பெற்றுள்ளன.

சிங்கத்தூண் மண்டபமும் சிற்பங்களும்



CONNEMARA PUBLIC
26 SEP 1956



துவஜஸ்தம்ப மண்டபத்திலுள்ள தூண்

சுற்றுக் கோயில்களுள் ஒன்றாகிய ராஜராஜேசுவரர் கோயிலில் மூல லிங்கம் ஐந்து முகங்களைக் கொண்டு பஞ்சமுக லிங்கமென விளங்குகிறது. அம்மன் சந்நிதியில் ஒரு தூணில் திரிமூர்த்திகளின் வடிவமும், ஒரே பாதமும் அமைக்கப்பட்டு ஏகபாத திரிமூர்த்தி எனப்பெயர் வழங்கப்படுகின்றது. இவைகளும் பழஞ் சிற்பத்தை நினைப்பூட்டுகின்றன.

சுவாமி சந்நிதிக்கு முன்னே உள்ள பெரிய துவஜஸ் தம்ப மண்டபம் சிறந்து விளங்குகின்றது. நான்கு பெரிய தூண்களை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு தூணுக்கும் மேல் எட்டு சிங்கங்கள் தாங்குவதாகக் கட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு தூணிலும் தலவரலாறுகளைத்தெரிவிக்கின்ற சிற்பங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. கோவிலைத் தரிசிக்க வரும் யாவரும் இம்மண்டபத்தைக் கண்டு வியந்து செல்வர். இது தமிழ்நாட்டின் சிறபத்திற்கும் நாகரிகத்திற்கும் அத்தாட்சியாக விளங்குகின்றது. இவ்விடத்தில் தேவஸ்தான காரியாலயம் இருந்து வருகிறது. கோயில் இடங்கள் அவ்வப்போது சுத்தம் செய்யப்பட்டு மிகவும் தூய்மையாய் இருக்கின்றன.

## 9. திருப்பணிகள்

புதியதோர் ஆலயத்தை அமைப்பதைப் பார்க்கிலும் பழமையான கோயிலைப் புதுப்பித்தல் மிக்க புண்ணியத்தைத் தரும். இக்கருத்துப்பற்றியே "புதிதுறப் பணிகள் வேறு புரிவதிற் பழயதொன்றை விதியுளி புதுக்குவோர்க்கு மிக்க புண்ணியந்தான் எய்தும்" என்றும், "யாவனொரு பணிவிடையை ஆலயத்தி லிழைக்கின்றா னவனுக்கெந்தப் பாவ வினைகளும் நசிக்கும் பாக்கியமெல்லாம் அவற்கே


பல்கும்" என்றும் இத்தல புராணத்தைப் பாடிய கச்சி யப்ப முனிவரே மற்றொரு புராணத்தில் பாடியுள்ளார்.

தென்னாட்டில் மூவர் பாடல் பெற்ற ஆலயங்களைத் தன வணிக மக்களாகிய நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் பெரும் பொருட் செலவில் புதுப்பித்தும், ஆங்காங்கு புதிய கோவில்களை அமைத்தும் திருப்பணிசெய்து மக்கட்குத் தெய்வ உணர்ச்சியை வளர்த்து வருகின்றார்கள்.

நகரத்தாருள் தனவணிகரும் சிவபக்தருமான கானாடு காத்தான் திரு. **சா. ராம. சித. சிதம்பரஞ் செட்டியார்** ஆகிய **சிதம்பர ஐயா** அவர்கள் சிதம்பரத்தில் ஸ்ரீ நடராஜர் கோயி லில் பல மண்டபங்களைக் கட்டுவித்தும், தங்க ஓடுகளைப் புதுப்பித்தும் பல திருப்பணிகளைச் செய்தார்கள். பிறகு பழமையான இக்கோயிலைப் புதுப்பிக்க எண்ணி 1308-ம் பசலியில் 1900-ம் ஆண்டில் திருப்பணி முகூர்த்தம்செய்து திருப்பணிசெய்யத் தொடங்கினார்கள்.

திருப்பணி மூல லிங்கத்தின் கர்ப்பக்கிரகத்திலிருந்து தொடங்கப்பெற்று முதல் பிரகாரம், இரண்டாம் பிரகாரம், மூன்றும் பிரகாரம் ஆகிய இடங்களில் வேலை முடிந்துள்ளது. அம்மன் கோவில் உள் மண்டபம் முற் றும் சலவைக் கல்லால் அமைக்கப்பட்டு இரண்டு பிரகா ரங்களிலும் திருப்பணி வேலை முற்றுப் பெற்றுள்ளது. கோயிலில் நான்கு பெரிய புதுத்தூண்கள் நிறுவப்பட்டன. புதிய தளவரிசைகள் போடப்பட்டும், மதில்கள் பழுது பார்க்கப்பட்டும், பழைய மண்டபங்கள் புதுப்பிக்கப்பட்டும், புதிய மண்டபங்கள் கட்டப்பட்டும், பல கிளைகள் கொண்ட புதிய பளிங்கு விளக்குகள் அமைக்கப்பட்டும் இவ்வாறாக மிகுந்த பொருட்செலவில் திருப்பணிகள் நடைபெற்றன. கோயில் முழுதும் மிகவும் புனிதமாய் விளங்குகின்றது.

CONNEMARA PUBLIC LIBRARY
26 SEP 1956
MADRAS



மானேஜிங் டிரஸ்டியும் திருப்பணியாளருமாகிய
சா. ராம. சித. பழனியப்பச் செட்டியார்

இவ்வாருகத் திருப்பணிகள் முடியப்பெற்று 1908-ம் ஆண்டில் மிகுந்த பொருட்செலவில் சுவாமி கோவிலுக்கும், அம்மன் கோவிலுக்கும் மிக விமரிசையாகக் கும்பாபிஷேகம் நடந்தேறியது. அப்போது கும்பகோணம் ஸ்ரீ சங்கராச்சாரிய் சுவாமிகளும், சிருங்கேரி மடத்து ஸ்ரீ நரசிம்மபாரதி சுவாமிகளும் விஜயம் செய்திருந்தார்கள். அன்று இரவு பஞ்ச மூர்த்திகளின் புறப்பாட்டுக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. அடியேனும் தரிசிக்கும்படியான பேறுபெற்றேன். இந்தக் கும்பாபிஷேக வைபவத்தை ஆதி திருப்பணி தொடங்கிய **திரு. சிதம்பரஞ் செட்டியார்** அவர்கள் நடத்தி வைத்தார்கள்.

அவர்களுக்குப் பிறகு **திரு. சிதம்பரஞ் செட்டியார்** அவர்களின் புதல்வர் **திரு. இராமசாமிச் செட்டியார்** அவர்களும், அடுத்த புதல்வராகிய திவான் பகதூர் **திரு சபாரெத்தினம் செட்டியார்** அவர்களும் திருப்பணி வேலைகளைத் தொடர்ந்து கவனித்து வந்தார்கள். பிறகு இவர்கள் குடும்பத்தைச் சேர்ந்த **திரு. ஜம்புலிங்கஞ் செட்டியார்** அவர்கள் திருப்பணி வேலைகளைக் கவனித்து வந்ததுடன் பத்து ஆண்டுகள் வரை தர்மகர்த்தராக இருந்து கோயிலையும் சீர்திருத்தம் செய்து வந்தார்கள். இவர்கள் கோயிலைச் சேர்ந்த விடுபட்ட நிலம் முதலியவைகளைச் சேர்த்து வருமானத்தை அதிகப்படுத்திஞர்கள். அவர்களுக்குப் பிறகு தற்போதுள்ள மானேஜிங் டிரஸ்டி திரு. **பழனியப்பச் செட்டியார்** அவர்கள் 10 ஆண்டுகளாகத் தர்மகர்த்தராக இருந்து கோயில் காரியங்களைக் கவனித்து வருவதுடன் பொதுக் குடும்பத் திருப்பணி வேலைகளையும் கண்காணித்து வருகிருர்கள். இவர்களுடன் ட்ரோஜன் கம்பெனி **திரு. அண்ணுமலை செட்டியார் அவர்களும்** திருப்பணி வேலை

2

யில் ஒத்துழைத்து வருகிறார்கள். 1900-ம் ஆண்டில் தொடங்கிய கோயில் திருப்பணி வேலை, அன்று முதல் இன்று வரையில் சுமார் 52 வருடகாலமாகத் தவறாமல் நடைபெற்று வருகிறது. இப்போது ஆயிரக்கால் மண்டபத்தில் தளவரிசைத் திருப்பணி முடிந்து மேல் தள வேலை நடைபெற்று வருகிறது.

இக்கோயிலில் திருப்பணி வேலையை ஆதியில் தொடங்கிய **திரு. சிதம்பரஞ் செட்டியார்** அவர்களின் நினைவாக ஐம்பொன்னாலாகிய அவர்களுடைய சிலைவடிவம் சுவாமி சந்நிதியில் விளக்கேந்தி நிற்கும் முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

## (1) பிற திருப்பணிகள்

1. **நந்தவனம்:**—5-ம் பிரகாரத்தின் வடதிசையில் கொள்ளிடம் போகும் வழியில் கோவிலின் உபயோகத்திற்காக ஒரு நந்தவனம் திரு. ராமசாமி செட்டியார் அவர்களால் 1903-ம் ஆண்டில் அமைக்கப் பெற்று அதிலிருந்து மலர்கள் எடுக்கப்பெற்றுப் பூஜைக்குச் சாத்தப்படுகின்றன.

2. **திருவாசிகை விளக்கு :**—சுவாமி சந்நிதியில் உள்ள பெருந் திருவாசிகை விளக்கு ரங்கூன் ரெட்டியார் குடும்பத்தைச்சேர்ந்த ஸ்ரீமதி செல்லத்தம்மாள் அவர்களாலும் அம்மன் சந்நிதியில் உள்ள விளக்கு நாச்சிக்குறிச்சி திரு. பெருமாள் கோனார் அவர்களாலும் அமைக்கப்பட்டுத் தினந்தோறும் விளக்குகள் ஏற்றப்பட்டு வருகின்றன. இவை "சோதியே சுடரே, சூழ் ஒளி விளக்கே" என்னும் செய்யுளை நினைப்பூட்டுகின்றன.

3. **தேர்கள் :**—1910-ம் ஆண்டில் சுவாமிக்கும் அம்மனுக்கும் இரு பெரிய ரதங்கள் செய்யப்பட்டு அவைகளுக்குரிய தேர்ச்சேலைகளும் துத்தநாக மூடிகளும் தயா



சா. ராம. சித. இராமசாமி செட்டியார்



சா. ராம. சித. சபாரெத்தினம் செட்டியார்

PUBLIC LIBRARY
26 SEP 1958
MADRAS

ரிக்கப்பட்டுள்ளன. சுவாமி தேர் பொதுக் குடும்பத்தாலும் அம்மன் தேர் திரு. சிதம்பர ரெட்டியார் அவர்களாலும் செய்யப்பட்டன.

4. **பள்ளியறை** :—இது தோல் கிடங்கு திரு. கிருஷ்ணையர் அவர்களால் 1908-ம் ஆண்டில் அம்மன் கோயிலில் சலவைக் கல்லால் கட்டப்பெற்றுள்ளது.

5. **வேத பாடசாலை** :— இத்தலத்தில் ரிக், யசுர், சாமம் என்னும் வேதங்களுக்குரிய பாடசாலைகள் தனித் தனியான கட்டிடங்களில் நடைபெற்று வருகின்றன. பல மாணவர்கள் அவைகளில் பயின்று வருகின்றனர். ரிக் வேத பாடசாலை காரைக்குடி அ.மு.க. குடும்பத்தாருடைய தனி நிதியிலிருந்தும், யசுர் வேத பாடசாலை கண்டனூர் வயி. குடும்பத்தாருடைய நிதியிலிருந்தும், சாம வேத பாட சாலை பள்ளத்தூர் ப. ராம. ப. சு. குடும்பத்தாருடைய நிதியிலிருந்தும் நடைபெற்று வருகின்றன. இவைகளில் இரு பாடசாலைகள் சந்நிதி வீதியிலும் ஒன்று வடக்கு 4-ம் பிரகாரத்திலும் உள்ளன.

6. **மணி மண்டபம்**:—ரங்கூன் திரு. ராஜா சர் இராம நாதரெட்டியார் அவர்களால் அமைக்கப்பெற்றது. இது 2-ம் பிரகாரத்தில் வடமேற்கில் உள்ளது.

7. **பசுமடம்** :—இது 4-ம் பிரகாரத்தில் வடமேற்கில் உள்ளது. காரைக்குடி திரு. சி. மு. அரு. முத்துராமன் செட்டியார், திரு. நாராயணஞ் செட்டியார் ஆகிய இவர்களால் அமைக்கப்பெற்றது. மூன்றுகால அபிஷேகங்களுக்கும் பால் உதவப்பட்டு வருகிறது.

8. **தண்டபாணி சந்நிதி** :—இது 3-ம் பிரகாரத்தில் வடமேற்கில் புதிதாக அமைக்கப் பெற்றுள்ளது.

**9. தாடங்கம்:**—(காதணி). அம்மன் காதுகளில் ஆதி சங்கராச்சாரிய சுவாமிகளால் ஸ்ரீ சக்ரம் அடங்கிய தாடங்கம் சாத்தப்பட்டுப் பிறகு 1923-ல் தங்கத் தகடு சேர்க்கப்பெற்றது. அம்மன் சந்நிதிக்கு எதிரில் உள்ள விநாயகர் கோயிலும் ஆதி சங்கராச்சாரியரால் அமைக்கப் பெற்றதாகச் சொல்லப்படுகிறது. இதில் ஸ்ரீ சங்கரரின் சிலையும் உள்ளது.

**10. வாகனங்கள்:**—வெள்ளி மயில், வெள்ளி ரிஷபங்கள், வெள்ளி விமானங்கள், வெள்ளி கேடயம், தங்கத் திருவாசிகைகள் முதலியன புதிதாகச் செய்யப்பட்டுள்ளன.

**11. மின்சார விளக்கு:—1935**-ம் ஆண்டில் சுவாமி கோயில், அம்மன் கோயில் மண்டபங்கள், ஆகிய இடங்களில் மின்சார விளக்குகள் அமைக்கப்பட்டுத் தினந்தோறும் ஏற்றப்பட்டு வருகின்றன. இத்திருப்பணி கோயில் திருப்பணியிலிருந்தும், பொது வசூலிலிருந்தும் செய்யப்பட்டது.

## 2. புராதனத் திருப்பணிகள்

'திருவானைக்கா திருப்பணிமாலை' என்னும் பழைய நூல் ஒன்று உள்ளது. இதன் மூலமாக இக்கோயிலின் மதில்கள், கோபுரங்கள், மண்டபங்கள் முதலியவைகள் சோழர்களாலும் பாண்டியர்களாலும், நாயக்க மன்னர்களாலும், மற்ற பக்தர்களாலும் அவ்வப்போது, திருப்பணி செய்யப்பட்ட செய்திகள் தெரிய வருகின்றன.

கோச்செங்கட் சோழன், விஜயபாலன், திருநீற்றுச் சோழன், விக்கிரம சோழன், சுந்தர பாண்டியன், குலசேகர பாண்டியன், வரகுண பாண்டியன், திருமலை

CONNEMARA PUBLIC LIBRARY
26 SEP 1956
MADRAS



சா. ராம. சித. ஜம்புலிங்கம் செட்டியார்

நாயக்கர் முதலிய மன்னர்களின் பெயர்களும், வேறு பல பக்தர்களின் பெயர்களும் இந்நூலில் சொல்லப்படுகின்றன.

நான்காம் பிரகாரத்தில் கீழ்த்திசையிலுள்ள பெரிய கோபுரம் சுந்தர பாண்டியனால் அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. கோபுர வாயிலில் மேல் விட்டத்தில் பாண்டியருக்குள்ள மீன் வடிவம் பொறிக்கப்பட்டுள்ளது. மூலக்கோயில் மண்டபங்கள், மதில்கள், கோபுரங்கள் முதலியவை கோச்செங்கட் சோழன் முதலிய சோழர்களால் கட்டப்பட்டனவாகத் தெரியவருகிறது.

## திருப்பணி மாலையிலுள்ள முற்காலத் திருப்பணிகளைக் குறிக்கும் விவரம்.

1. **கோச்செங்கட் சோழன் :—** திருச்சாலகக்கெண்டிகை, மண்டபம் கோபுரம், நந்தி புகா வாயில் மாடவீதி, 18 மடம், எண் திசை இடபக் கொடிகள்.

2. **விஜய பாலன் அகளங்க வளவன்—** 2-ம் பிரகாரத்து மதில், கோபுரம், மண்டபம்.

3. **விக்கிரம சோழன் :—** 3-ம் பிரகாரம், மதில், மண்டபம், கோபுரம்.

4. **இராமர் :—** திருக்குளம், சிவலிங்கம், வசந்த மண்டபம்.

5. **சுந்தர பாண்டியன்—** 4-ம் பிரகாரத்தில், கோபுரம் முதலியன.

6. **சிவமுனிச் சித்தர்—** (முக்கட் செல்வர்) திருநீறிட்டான் மதில், 4 கோபுரங்கள் முதலியன.

7. **ஸ்ரீ சங்கராச்சாரியார்—** பிரசன்ன விநாயகர் பிரதிட்டை—தாடங்கப் பிரதிட்டை.

8. **குலசேகர பாண்டியன்**—*விண்ணேங்கு மண்டபம்.*

9. **மதுரை வரகுண பாண்டியன்**—*விடையாத்தி மண்டபம்.*

10. **திருநீற்றுச் சோழன்**—*யாகசாலை, கோடை விழா மண்டபம்.*

11. **அழகனருள் முதலியப்பன்**—*கிலா எறிக்கும் மண்டபம், சிவலிங்கப் பிரதிட்டை, சிகரத்துக்குப் பொன் முலாம் பூச்சு.*

12. **வரிசைப் பெருமாளையன்**—*நீராழி மண்டபம், புஷ்கரணி திருமாளிகைப் பத்தி மைய மண்டபம்.*

13. **சொக்கப் பய்யன்**—*வீரேஸ்வரத்துக்கு மேற்கே ஓர் மண்டபம்.*

14. **சம்புநாத செட்டி**—*ரோகணி நட்சத்திரத் தீர்த்தம் நாலுகால் மண்டபம், பூசக் கட்டளை.*

15. **சுப்பிரமணிய மகாமுனி**—*செங்கழுநீர் விநாயகர் திருப்பணி — கோபுரம் — சந்நிதிக்கு முன், பிள்ளையார் கோயில்.*

16. **மாணிக்க வாசகன்**—*கருங்கற் சிங்காசனம்.*


17. **தெய்வராயன்**—*திருவளர் சோலையில் நந்தவனம், மணி மண்டபம்.*

18. **ரெங்கஜய துங்கன்**—*அம்மன் கோயில் கம்பத்தடியில், உயர் மண்டபம்.*


19. **பேரம்பலத் துறைவர் சைவமுனி**—*ஆயிரக்கால் மண்டபம்.*

20. **சிவந்தி நாதன்**—*தாழைக்குடி மண்டபம்.*

21. **மந்திரிப் பெருமாள்**—*வெங்கங்குடி மண்டபம்.*



சா. ராம. சித. அண்ணாமலை செட்டியார்



ஆசிரியர் R. பஞ்சநதம் பிள்ளை

நூல் ஆக்கியோன்

26 SEP

**22. கச்சி செட்டியப்ப நாயக்கர்**—காவிரியின் கரையில் தன் பேரால் பதினாறு கால் மண்டபம் அமைத்தது.

**23. கனகய்யன்**—(மறை வல்லோன்) மேலைத் தெருவில் கைலாய வாகன மண்டபம். இவைகளையல்லாமல், வாணாதிராயன், நித்தியானந்த நாராயண தீக்ஷதன், திருமலை நாயக்கன், சுப்பிரமணிய மகா முனிவன், முதலியவர்கள் காலத்தில் பல திருவாபரணங்கள், வாகனங்கள், கோரதம் முதலிய திருப்பணிகள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. (இந்தத் திருப்பணிகளைக் குறிக்கும் செய்திகள் செய்யுட்களில் அமைந்துள்ளன.)

## 10. மடங்கள் சத்திரங்கள் முதலியன

கோயிலுக்கு வெளியே 4-ம் பிரகாரத்தில் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளின் கிளை மடமும், சந்நிதி வீதியில் திருவாவடுதுறை, தர்மபுரம் ஆதீனங்களின் கிளை மடங்களும், ரங்கூன் திரு. சிதம்பர ரெட்டியார் சத்திரமும், ஆர்நாட்டு வேளாளர் சத்திரமும், காத்தப் பெருமாள் பிள்ளை சத்திரமும், நகரத்தார் விடுதிகளும், வேறு பொது இடங்களும் வெவ்வேறு இடங்களில் உள்ளன. ரங்கூன் ரெட்டியார் சத்திரத்தில் பள்ளிக்கூட மாணவர்களுக்கு உண்டியும் உறையுளும் கொடுக்கப்படுகின்றன. இத்தலத்தில் ரிக், யசுர், சாமம் ஆகிய மூன்று வேதங்களுக்குரிய மூன்று வேத பாடசாலைகள் தனித்தனி இடங்களில் உள்ளன. இவைகளைப்பற்றிய செய்திகள் முன்னே சொல்லப்பட்டன. தினந்தோறும் சந்நிதியிலும், திருவிழாக்களிலும் வேத பாராயணம் நடைபெறுகின்றது. தேவார பாடசாலை முன்பு சிலகாலம் நடைபெற்று வந்து நின்றுவிட்டது. தற்போது கோயிலின் ஆதரவில் காலையிலும்

மாலையிலும் சந்நிதியில் தேவார பாராயணம் நடைபெற்று வருகிறது. அம்மன் சந்நிதிக்கு எதிரில் பழங்காலத்து நெற்களஞ்சியம் ஒன்று பழமையை நினைப்பூட்டிக்கொண்டிருக்கிறது.

## 11. வழிபட்டோர்

பிரமன், திருமால், திக்குப்பாலகர், அஷ்டவசுக்கள், சம்புமுனி, அம்பிகை, சிலந்தி, யானை, இராமர், பராசரர், சோழன், கோச்செங்கண்ணன், கௌதமர், குபேரன் அகத்தியர், சூரியன் சந்திரன், இந்திரன், அக்கினி முதலியவர்களும், திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், சுந்தரமூர்த்திசுவாமிகள், ஸ்ரீ ஆதிசங்கராச்சாரியார், அருணகிரிநாதர் ஆகியோரும், ஐயடிகள் காடவர்கோன், கச்சியப்பமுனிவர், காளமேகப் புலவர், மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை முதலிய புலவர்களும் இத்தலத்துப் பெருமானை வழிபட்டுப் பேறு பெற்றுள்ளார்கள்.

## 12. தினப் பூஜைகள்

தினந்தோறும் காலை, உச்சி, மாலை, இரவு ஆகிய நான்கு காலங்களிலும் அபிடேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. இவை நான்கும் சர்க்கார் கட்டளையில் நிகழ்வன. அர்த்த சாமத்தில் அபிஷேகமில்லை. உச்சிக் காலப் பூஜையில் அம்மன் கோயில் அர்ச்சகர் பெண் வேடம் தரித்து எடுபிடிகளுடன் சுவாமி கோவிலை வலம் வந்து பூஜிப்பார். அம்பிகை பூஜிப்பதாக ஐதீகம். தினமும் உச்சிக் காலத்தில் பசுவைக் கொண்டுவந்து சந்நிதியில் நிறுத்திப் பூஜிப்பது வழக்கம். சோழமன்னர் காலத்தில் ஆறு காலங்களில் பூஜை நடைபெற்று வந்ததாகத் தெரியவருகிறது.

## 13. திருவிழாக்கள்

இத்தலத்தில் திருவிழாக்கள் சகலாகமசங்கிரகத்தின்படி நடைபெறுகின்றன. பிரம்மோற்சவம் ஆண்டுதோறும் மாசிமாதத்தில் தொடங்கிப் பங்குனியோடு 40 நாள் வரையில் நடைபெறும். இந்த நாட்களில் விநாயகர், சுப்பிரமணியர், நால்வர், சோமாஸ்கந்தர், சண்டிகேசுவரர் முதலிய எல்லா மூர்த்திகட்கும் விழாக்கள் நடைபெறும். முதல் நாள் மண்ணெடுத்தலும், விநாயகருக்கும், சுப்பிரமணியருக்கும் 5 நாளும், நால்வருக்கு 3 நாளும், கல்யாணசுந்தரர்க்கு 3 நாளும், சந்திரசேகரர்க்கு 6 நாளும், சோமாஸ்கந்தருக்கு 10 நாளும், பல்லக்குச் சொக்கருக்கு 3 நாளும், மௌன விழா 3 நாளும், சண்டிகேசுவரருக்கு 3 நாளும் பஞ்சப்பிரகாரம் 1 நாளும், விடையாற்றி 1 நாளும், மண்டலாபிஷேகம் 1 நாளும், ஆக 40 நாட்கள் வரையில் உற்சவம் நடைபெறும். மாசி மாதம் மிருகசீரிட நட்சத்திரத்தில் கொடியேற்றமும், பங்குனி ரேவதியில் தேரோட்டமும், ரோகிணியில் தீர்த்தமும், பங்குனி மாதம் சித்திரை நட்சத்திரத்தில் பஞ்சப்பிரகாரமும் நடைபெறும். பஞ்சப் பிரகார உற்சவம் மிக விமரிசையாய் நிகழும். அன்று பெருமான் பெண் கோலம் பூண்டும், அம்பிகை ஆண் வேடங்கொண்டும் ஐந்து வீதிகளிலும் பவனி வந்து காட்சி கொடுப்பார். இக்காட்சியைக் கண்டு தரிசிக்கக் கண்கள் பல வேண்டும். பிரம்மோற்சவத்துக்குமுன் பிடாரி அம்மனுக்கு ஐந்து நாள் உற்சவம் நிகழும். இவையல்லாமல் வைகாசியில் வசந்தோற்சவம் வசந்தமண்டபத்தில் 10 நாட்கள் நடைபெறும். ஆனி மாதத்தில் பௌர்ணமியில் சுவாமிக்கு முப்பழ அபிஷேகமும், ஆனித் திருமஞ்சனத்தில் நடராஜர் புறப்பாடும் நிகழும். ஆடியில் கார்த்திகை யன்று கொடி

யேற்றமாகிப் பத்து நாள் ஆடிப்பூர விழா நிகழும். கடைசி நாளாகிய பூரத்தில் உட்குளமாகிய சூரிய தீர்த்தத்தில் தெப்ப விழா நடைபெறும். ஆவணி மூலத்தில் பிட்டுக்கு மண் சுமந்த ஐதீகம் நடைபெறும். புரட்டாசியில் 10 நாட்கள் அம்மன் சந்நிதியில் உள்ள நவராத்திரி மண்டபத்தில் நவராத்திரி விழா நிகழும். அப்போது சமயச் சொற்பொழிவுகளும், நல்லிசைவாணர்களால் இசைக் கூட்டங்களும் நடைபெறும். ஐப்பசியில் கந்தர் சஷ்டியில் சூரசம்மார உற்சவமும், கார்த்திகை மாதத்தில் சோமவாரந்தோறும் சங்காபிஷேகமும், பெரிய கார்த்திகையன்று சுடலைத் தீபமும் நடைபெறும். மார்கழியில் திருவாதிரை நாளில் 2-ம் பிரகாரத்திலுள்ள நடராஜர் அறுபத்து மூவருடன் புறப்படும். முதல் பிரகாரத்திலுள்ள மூல நடராஜர் புறப்படுவதில்லை. தை மாதத்தில் 40 நாட்கள் உற்சவம் நடந்து கடைசி நாளில் இராம தீர்த்தத்தில் தெப்பத் திருவிழா நிகழும். தைப்பூசத்தன்று சுவாமி கொள்ளிடக் கரைக்கும், மாசி மகத்தில் காவிரிக் கரைக்கும் சென்று தீர்த்தம் கொடுத்து இரவில் திரும்பும்.

## ஸ்ரீ ஜெம்புகேஸ்வரம் தேவஸ்தானம் வருஷாந்தர உற்சவங்களின் பட்டி

**சித்திரை-மீ** :—சித்ரவிஷு புண்ய காலதினத்தன்று இரவில் ரிஷப வாகனம் புறப்பாடு. ராத்திரி புதுப்பஞ்சாங்க படனம். பௌர்ணமியன்று மருக்கொழுந்துஸமூலம் அபிஷேகம்.

**வைகாசி-மீ** :—வைகாசி-மீ பௌர்ணமியன்று ஏக வஸந்தம். இதற்குமுன் பத்தாம்நாள் அன்று வஸந்தோற்ஸவம் ஆரம்பம். ஷை மாதம் பௌர்ணமியன்று அன்னபி

ஷேகம். வைகாசி-ஸ்ரீ விசாக நக்ஷத்திரத்தில்பால்மாங்காய் அபிஷேகம்.

**ஆனி-ஸ்ரீ** :—உத்திர நக்ஷத்திரத்தன்று ஆனித் திருமஞ்சனம், மறுநாள் நடராஜர் புறப்பட்டு பவனிவரும் காக்ஷி. பௌர்ணமியன்று முப்பழம் அபிஷேகம்.

**ஆடி-ஸ்ரீ** :—ஆடி-ஸ்ரீ தக்ஷிணாயண புண்ய காலத்தன்று பகலில் தீர்த்தவாரி, இரவில் ரிஷபவாகனம் புறப்பாடு.

ஷை மாதம் பரணி நக்ஷத்திரத்தில் ஆடிப்பூர உத்ஸவம் துவஜாரோஹணம் முதல் திருநாள். ஆடி-ஸ்ரீ பூர நக்ஷத்திரத்தில் தீர்த்தம். 12-வது திருநாள் திருவாடிப்பூர தெப்பக் குளத்தில் தெப்போத்ஸவம் நடைபெறும். ஆடி அமாவாசையன்று இரவில் ரிஷபவாகனம் புறப்பாடு. ஷை மாதம் பௌர்ணமியன்று பட்டு பவித்ரம்.

**ஆவணி-ஸ்ரீ** —ஆவணி-ஸ்ரீ மூல நக்ஷத்திரத்தில் ஆவணி மூலம். ஸ்வாமி பிட்டுக்கு மண்சுமந்த உத்ஸவம். ஷை மாதம் பௌர்ணமியன்று திலாபிஷேகம்.

**புரட்டாசி-ஸ்ரீ** :—புரட்டாசி-ஸ்ரீ கிருஷ்ண சதுர்த்தசி ராத்திரி கேதாரவிரதம். மறுநாள் ஸோமாஸ்கந்தர் புறப்பாடு. மறுநாள் நவராத்திரி உத்ஸவாரம்பம். ஸரஸ்வதி பூஜை விஜயதசமியன்று அம்பு எய்தல். ஷை மாதம் பௌர்ணமியன்று பாலாபிஷேகம்.

**ஐப்பசி-ஸ்ரீ** :—நரகசதுர்த்தசியன்று தீபாவளி அபிஷேகம். ஷை மாதம் பௌர்ணமியன்று விபூதி அபிஷேகம். ஸ்கந்தசஷ்டி உத்ஸவம்.

**கார்த்திகை-ஸ்ரீ** :—கார்த்திகை-ஸ்ரீ சோமவாரங்களில் சங்காபிஷேகம். ஷை மாதம் ஸர்வாலய தினத்தன்று சொக்கப்பானை. பௌர்ணமியன்று கிருதபடம்.

**மார்கழி-மீ :**—தனுர்மாஸ பூஜாரம்பம். ஷை மாதம் திருவாதிரை நக்ஷத்திரத்தில் ஆருத்ராதெரிசனம். ஷை மாதம் முதல்தேதி திருப்பாவாடை. மாணிக்கவாசகர் உத்ஸவம். ஷை மாதம் பௌர்ணமியன்று ஆஜ்யாபிஷேகம். மஹாவியதீபாதத்தினம் உதயவியாப்தி பாவாடை.

**தை-மீ :**—உத்தராயண புண்யகாலம், மகர சங்கராந்தி காலையில் தீர்த்தம், இரவு ரிஷப வாஹனம். தை அமாவாசையன்று ராத்திரி ரிஷபவாஹனம். ஷை மாதம் சதய நக்ஷத்திரத்தில் தை தெப்ப உத்ஸவம். துவஜாரோஹணம் முதல் திருநாள் ஆரம்பம், 11-ம் திருநாள் ராமதீர்த்த தெப்பக்குளத்தில் தெப்போத்ஸவம். மறுநாள் தைபூசம் கொள்ளிடத்தில் தீர்த்தவாரி, ராத்திரி ரிஷபவாஹனம். ஷை மாதம் கடைசி செவ்வாய்கிழமை பிடாரியார் உத்ஸவ முதல்காப்பு. ஷை மாதம் பௌர்ணமி மது அபிஷேகம்.

**மாசி-மீ :**—மஹா சிவராத்திரி அபிஷேக ஆராதனை ரிஷபவாஹனம். பௌர்ணமி கிருதபடம்.

**பங்குனி-மீ :**—மண்டல பிரம்மோத்ஸவம். ஷை மாதம் மிருகசீர்ஷத்தில் மண்டல பிர்ம்மோத்ஸவம். ஷை மாதம் மிருகசீர்ஷத்தில் மண்டல பிர்ம்மோத்ஸவம் துவஜாரோஹணம். இந்த உத்ஸவத்தில் தெருவடைச்சான் ரிஷபவாஹனம், ரதோத்ஸவம், பஞ்சப்பிரகார மஹோத்ஸவம் முதலியவைகள் விமரிசையாக நடைபெறும். ஷை மாதம் பௌர்ணமி கந்தாபிஷேகம்.

## 14. புராண வாலாறுகள்

இத்தலத்தின் பெருமையை விளக்குகின்ற திருவானைக்காப் புராணம் என்னும் சிறந்த நூல் ஒன்று உண்டு. சொற்சுவை பொருட்சுவை மிகுந்தது. கலைகளில் வல்லவ

ரான கச்சியப்ப முனிவரால் இயற்றப்பெற்றது. 25 பகுதிகளைக் கொண்ட விரிவான வரலாற்றை உடையது. அவ் வரலாறுகளில் சில ஈண்டுச் சுருக்கமாகக் கூறப்படும்.

## (1) யானையும் சிலந்தியும் வழிபட்டது.

கைலையங்கிரியில் உள்ள பல கணநாதர்களுக்குள் மாலியவான், புஷ்பதந்தன் என்ற இருவர் இருந்தனர். அவ்விருவரும் சிவபக்தியில் மிக்க ஊக்கங்கொண்டு ஒருவர்க்கொருவர் மேம்பட வேண்டுமென முயன்றனர். இதன் காரணமாக இருவரும் பொறாமையுற்றுப் பகை கொண்டனர். ஒருநாள் மாலியவான் புஷ்பதந்தனை யானையாகும்படிச் சபித்தான். புஷ்பதந்தனும் மாலியவானைச் சிலந்தியாகும்படிச் சபித்தான். இருவரும் மங்கைபாகனிடம் முறையிட்டனர். பெருமான் அவர்களைச் சோழ நாட்டில் ஞானதலத்தை அடைந்து வழிபட்டுத் தங்கள் சாபம் நீங்கும்படித் திருவருள் புரிந்தார். இதன்படி கணநாதர் இருவரும் யானையும் சிலந்தியுமாகப் பூமியில் பிறக்கலாயினர்.

இவ்வாறாகத் தோன்றிய யானையும் சிலந்தியும் இத்தலத்துப் பெருமானைப் பூசித்து முத்தியடைய விரும்பின. யானை கோயிலைச் சேர்ந்த பல தீர்த்தங்களில் சென்று நீராடியது. பின்னர் தன் துதிக்கையில் தீர்த்தத்தை நிறைத்துப் பல மலர்களைப் பறித்து வைத்துக்கொண்டு உள்ளே சென்றது. பெருமானுடைய சந்நிதியில் கிடந்த சருகு முதலிய குப்பைகளை அகற்றித் துதிக்கையில் கொண்டுவந்த நீரால் திருமுடியில் அபிஷேகம் செய்து தான் கொண்டு வந்த பல மலர்களை அன்புடன் சாத்தி வழிபட்டுப் பலவாறு போற்றிப் பின்பு தன் இருப்பிடஞ் சென்றது. இவ்வாறு யானை பூசித்து வருகையில் ஒரு சிலந்தி நாவல் மரத்தை

இடமாகக்கொண்டு வசித்துவந்தது. மரத்தின் தழைகள் கீழே விழாதபடி தன் வாய் நூலால் பந்தலிட்டும், கோயில் அமைத்தும் வழிபட்டு வந்தது.

மறுநாள் காலையில் யானை வழக்கம் போல நீராடி மலர்களைப் பறித்துக்கொண்டு சந்நிதிக்கு வந்தது. பெருமான் முடிக்குமேல் நூற்பந்தர் அமைந்திருப்பது கண்டு சினங்கொண்டது. அவ்விடத்தில் நூல் இருப்பது குற்றமென எண்ணி நூற்பந்தரைச் சிதைத்து அவ்விடத்தைப் புனிதமாக்கி மீண்டும் நீராடிப் பெருமானைப் பூசித்துச் சென்றது. சிலந்தியும் சந்நிதியில் தன் நூற்பந்தர் இல்லாதிருத்தலையும் சருகு முதலிய குப்பைகள் கீழே உதிர்ந்து கிடப்பதையும் கண்டு மனம் வருந்தி மீண்டும் புதியதோர் நூற்பந்தரைச் செய்து திரும்பியது.

இவ்வாருகத் தினந்தோறும் யானை நூற் பந்தரை அழிப்பதும், சிலந்தி புதிய பந்தலை அமைப்பதும் ஆக நிகழ்ந்து வந்தது. இப்படி நிகழ்ந்து வருங்காலத்தில் சிலந்தி ஒரு நாள் தன் நூற்பந்தர் எவ்விதம் அழிவது என்பதைக் கண்டு பிடிக்க மரத்தின் ஒரு பக்கத்தில் மறைந்திருந்தது. யானை வழக்கம்போல வந்து நூற்பந்தரை அழித்து முன் போலப் பூஜை செய்தது. மறைந்திருந்த சிலந்தி தன் நூற் பந்தல் யானையால் அழிந்ததைக் கண்டு கோபங்கொண்டு யானையின் துதிக்கையில் உள்ள துளையில் நுழைந்து வேகமாய் ஏறிக் கபாலத்தில் சென்று கடித்தது. யானையும் இடியோசைபோல் கர்ச்சித்துக் கீழே விழுந்து இங்கும் அங்கும் புரண்டு பலவாறு துன்புற்று உயிர் நீத்தது. யானை இறந்தமையால் உள்ளே புகுந்த சிலந்தியும் வெளியில் வர வழியில்லாமல் மாய்ந்தது. அப்போது அவ்விரண்டும் பகைமை நீங்கித் தேவ சரீரத்துடன் தோன்றி நின்றன. பெருமானும் அவர்களுக்குக் காட்சி கொடுத்து, " நீங்கள்

நம்மை அன்புடன் பூசித்ததனால் தேவர்களும் வணங்கத் தக்க சிறப்பை அடைந்தீர்கள். யானை வடிவம் நீங்கப் பெற்றவன் நமது உலகத்தில் பூர்வத்திலிருந்தபடியே கண நாதனாக விளங்குவான். யானை வடிவம் பெற்ற அவன் பெயரால் இத்தலம் விளங்கும். சிலந்தி வடிவம் நீங்கியவன் சோழர் குலத்தில் மன்னனாகப் பிறந்து பல தர்மங் களைச் செய்து மோட்சமடைவான்" என்று சொல்லி மறைந்து அருளினார்.

யானைக்கு அருள் புரிந்ததால் திருவானைக்கா என்ற பெயர் உண்டாயிற்று. யானைவடிவம் நீங்கியவன் இன்ப வுலகம் அடைந்தான். சிலந்தி வடிவம் நீங்கியவன் சோழர் குலத்தில் சுபதேவனுக்கும் கமலாவதி என்பவளுக்கும் புதல்வனாகப் பிறந்து சிவந்த கண்களைக் கொண்டதால் கோச்செங்கண்ணன் என்ற பெயருடன் பல காலம் அர சாண்டான். சிவபெருமான் உறைவதற்குரிய திருக்கோ யில்கள் பல செய்வித்தான். "எண்டோளீசற்கு எழில் மாடம் எழுபது செய்து உலகாண்ட திருக்குலத்து வளர் சோழன்" என்று திருமங்கையாழ்வாரும் பாடியுள்ளார். இதனால் சோழன் திருமாலுக்கும் சில தலங்களை அமைத் திருப்பதாகத் தெரியவருகிறது.

> "சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழற் பந்தர் செய்து
> உலந்தவண் இறந்தபோதே கோச்செங்க ணானுமாகக்
> கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர்தங்கள்
> குலந்தனிற் பிறப்பித்திட்டார் குறுக்கை வீரட்டனாரே"

அஃறிணைப் பொருள்களாயினும் பக்தியுடன் வழிபட்டால் இறைவன் அவைகட்கு அருள் செய்வான் என்பது இத னால் விளங்குகிறது. இவ்வரலாறு அடங்கிய உலா பின்னே சேர்க்கப்பெற்றுள்ளது.

## (2) சம்பு முனிவர் தவஞ்செய்தது

நாவல் மரங்கள் நிறைந்த சம்பு வனமாகிய இத்தலத்தில் ஒரு காலத்தில் ஒரு முனிவர் தம் இந்திரியங்களை அடக்கிக் கடுந்தவம் புரிந்துவந்தார். ஒரு நாள் அம்முனிவனுக்கு முன்னே நாவல் மரத்திலிருந்து ஒரு வெண்ணாவற் பழம் விழுந்தது. அது மிக்க ஒளியையுடையதும் இனிய சுவையை உடையதுமாய் விளங்கியது. முனிவர் அப்பழத்தை எடுத்து அதன் பெருமையைக்கண்டு ஆச்சரியப்பட்டார். தாம் உண்ணாமல் இறைவனுக்கு நிவேதிக்கவேண்டும் என எண்ணிக் கைலை மலையை யடைந்து தாம் அருமையாய்க் கொண்டுவந்த கனியைப் பெருமானுக்குப் படைத்துத் தாம் உண்டார். தக்கார்க்கு ஈந்த பொருள் தினையளவாயினும் பனையளவு பெரிதாகுமாறு போல முனிவர் வயிற்றிற் சென்ற நாவல் விதை முளைக்கத் தொடங்கி முனிவரின் தலை வெடிக்கும்படி பெரிய மரமாக வளர்ந்து நிரம்பத் தளிர்த்து விளங்கியது. மரவடிவாய் நின்ற முனிவர் ஆனந்த நடனஞ் செய்யலானார். பெருமானைப் போற்றினார். தாய்மரத்தின் நிழலில் வசிக்கவேண்டினார். பெருமான் அம்முனிவரிடம் முன்பு கனிவிழ்ந்த இடத்திற்கே செல்லும்படிக்கும் தாம் அவ்விடம் வருவதாகவும் அருள்செய்தார். மரவடிவங் கொண்ட முனிவர் ஞானதலமாகிய இத்தலத்தையடைய விரும்பிக் கைலையிலிருந்து புறப்பட்டு நடந்து வரலானார். மரம் நடந்து வருவதைக்கண்ட பலர் ஆச்சரியமடைந்தனர்; சிலர் பின் தொடர்ந்தனர்; சிவபெருமான் திருவிளையாடல் என்று எண்ணினர். இவ்வாறு முனிவர் பல இடங்களின் வழியே வந்து முன்பு கனி விழுந்த இடமான சம்பு வனத்தை அடைந்து அவ்விடத்தில் பலகாலம் கடுந்தவம் செய்தார். பெருமானும் அவருடைய தவத்திற்கு இரங்கி அவர் விரும்பிய படியே நாவல் மர நீழலில் உறைவதானார்.

இத்தகைய பெருமை வாய்ந்த நாவல் மரமே தல விருக்ஷமாய் விளங்குகிறது. நாவல் என்ற ஜம்பு மரத்தின் அடியில் பெருமான் எழுந்தருளியிருப்பதால் ஜம்புநாதர் எனப் பெயர் பெற்ருர்.

இந்த நாவல் மரத்தின் பெருமைகள் ஓர் நாடி நூலில் விரிவாகச் சொல்லப்பட்டிருப்பதாயும், அதன்படி சில நாட்களுக்கு முன் ஓர் அன்பர் இவ்விடத்திற்கு வந்து நாவல் மரத்திற்கும், நாவலடியில் வீற்றிருக்கும் பெருமானுக்கும் சகஸ்ரநாம அர்ச்சனை செய்து வழிபட்டுச் சென்றதாகத் தெரிகிறது.

"உரை செய்மா மறைகள் மூலமாய்ப் பராரை
உபநிடதப் பொருளாகிக்
கரையுமா கமங்கள் பணைகளாய்ச் சரியை
கிரியையோ கங்கிளை வளார்கள்
விரைகுலா மிணராய் ஞானமோரைந்து
மெல்லரும் பலர்கள் காய் கனிகள்
புரையிலாக் கனியினிரதமா யுயிரின்
புகர் மலந்துரக்குமந் நாவல்."

## (3) பஞ்சப் பிரகார வரலாறு

திரிமூர்த்திகளில் ஒருவனை பிரமதேவன் தான் செய்து வரும் படைப்புத் தொழிலால் மிகவும் கர்வங்கொண்டு இருந்துவருங் காலத்தில் அழகிற் சிறந்த ஒரு பெண்ணைப் படைத்தான். அப்பெண்ணைக் கண்ட பிரமன் வினை வயத்தால் மேகத்தைக் கண்ட சாதகப் பறவையைப் போல் விரும்பித் தீய எண்ணங்கொண்டான். படைப்புத் தொழிலின் சக்தியும் குறைந்தது. அவனல் படைக்கப்பட்டோர் நன்னெறியினின்றும் விலகிப் புன்னெறியிற் சென்றனர். அகாலமரணம், துன்மரணம் முதலியவற்றை அடைந்தனர்.

இவ்வாறு நிகழ்வதைக் கண்ட பிரமன் தன் தவற்றை யுணர்ந்தான். மனம் நடுங்கினன். தான் செய்த குற்றத் திற்குப் பரிகாரம் தேட எண்ணிப் பல தலங்களையும் தரி சித்து ஞான தலமாகிய இத்தலத்தை அடைந்து கடுந் தவஞ் செய்யத் தொடங்கினன். நாவலின் அடியில் உறை யும் பெருமானார் இதை உணர்ந்தார். தேவியுடன் புறப் பட்டார். பிரமனுடைய மனதைச் சோதிக்கத் திருவுளங் கொண்டு பெருமான் தேவியாகவும், தேவி பெருமானாகவும் மாறுவேடங் கொண்டு பிரமனுக்கெதிரே காட்சி தந்தனர். பெருமானே பெண்ணுருக்கொண்டு வந்து நிற்பதை அறிந்த பிரமன் வேரற்ற மரம்போல் பரமனின் பாதங்களில் வீழ்ந்து வணங்கிப் பலவாறு துதித்தான். "கருணைக்கடலே! அர வாபரணா! அடியார்களை ஆண்டருளும் அண்ணலே! அடியேன் அறியாமையாற் செய்த குற்றத்தை மன்னித்து மீண்டும் படைப்புத் தொழிலை நடத்தத் திருவருள் புரிய வேண்டும்". எனப் பிரார்த்தித்தான். பிரமனுடைய பக் குவ நிலையைக் கண்ட பெருமானும் அவ்வாறே அருள் செய்து தேவியுடன் மறைந்தார்.

பிரமன் தன்னால் ஏற்படுத்தப்பட்ட தீர்த்தத்தில் மூழ் கிப் பஞ்சப்பிரகாரங்களாகிய ஐந்து வீதிகளிலும் வலம் வந்து பெருமானைப் பூசித்தான். ஜம்புநாதராகிய பெருமா னுக்கு 40 நாட்கள் வரை நடைபெறக்கூடிய மண்டல பிரம்மோற்சவத்தைச் சிறப்பாக நடத்தினன். 37-ம் நாளில் பெருமான் தனக்குக் காட்சி தந்த விதமாகவே இறைவன் பெண்ணுருக் கொண்டும், இறைவி ஆண் உருக் கொண்டும் எழுந்தருளச் செய்து பஞ்சப்பிரகார உற்ச வத்தை நடத்தி வைத்தான். பங்குனி மாதம் சித்திரை நட்சத்திரத்தில் பஞ்சப்பிரகார மகோற்சவம் சிறப்பாக

ஆண்டு தோறும் நடைபெற்று வருகிறது. அன்று பெருமானுடன் ஐந்து வீதிகளிலும் வலம் வருவோர் எண்ணிய பேறுகளைப் பெறுவர்.

## (4) அம்பிகை உபதேசம் பெற்றது,

உமாதேவியார் ஒரு சமயம் கைலாச பதியாகிய பரமசிவனை வணங்கி ஒரு சந்தேகப்பொருளைக் குறித்து வினவினார். பெருமான் உமாதேவியை நோக்கிப் "பூலோகத்தில் ஞானதலத்தையடைந்து தவஞ்செய்வாய்; நாம் அங்கு வந்து உபதேசிப்போம்" என்று திருவாய்மலர்ந்தருளினார். உமாதேவியார் பரமனைவிட்டுப் பிரிய மனமில்லாமல் மிகவும் வருந்தினார். உயிர்நீத்த உடப்பு போலவும், உணவு அகன்ற உயிரைப்போலவும், மயிர் நீத்த மானைப்போலவும், மணி நீத்த பாம்பு போலவும், மழை நீத்த பயிர் போலவும் வாடினார். பெருமான் தேவியார்க்கு அஞ்சல் அளித்து அபயம் தந்து ஞானதலத்துக்கு அனுப்பி வைத்தார். அம்மையார் விடைபெற்றுப் பெருமானைத் துதித்தபடியே விமானத்தில் புறப்பட்டார். பெருமானின் ஆக்ஞைப்படி பூத கணங்கள் படைகளுடன் முன்னே சென்றன. சுனந்தை, சயை, விசயை முதலிய தோழிகள் தேவியுடன் சூழ்ந்து சென்றார்கள். பேரிகைகள் முழங்கின; சங்குகள் ஆர்த்தன; மாதர்கள் நடனஞ் செய்தனர். சில மாதர் கிளி முதலிய பறவைகளைக் கையிலேந்தித் துதித்துச் சென்றார்கள். தேவியார் வழியில் ஆங்காங்குள்ள தலங்களைத் தரிசித்துக்கொண்டே வந்தார். ஞானதலமாகிய இத்தலம் நெடுந்தூரத்தில் தோன்றுவதைக் கண்ணுற்றார். ஞான தலத்தின் சோலைகளில் மேகங்கள் தங்கியிருத்தலையும், தென்றல் உலாவுவதையும், குயில்களும், பூவைகளும், கிளிகளும், வண்டுகளும் இசை பாடுவதையும், மயில்கள் தோகைகளை விரித்து நடனமாடுவதையும் கண்டு இன்புற்றார். ஆங்காங்கு

தவஞ்செய்யும் முனிவர்கள் தேவியாரைக் கண்டு வணங்கினார்கள். இத்தகைய காட்சிகளைக் கண்ட தேவியார் சுநந்தை என்னும் தோழியிடம் "நாம் பரமனை விட்டுப் பிரிந்த போதிலும் ஒப்பில்லாத இத்தலத்தின் இயற்கைக் காட்சிகளைக் கண்டு பெருமகிழ்ச்சி யடைந்தோம்" என்று தெரிவித்தார். பின்பு தலத்தின் உள்ளே சென்று பல தீர்த்தங்களிலும் நீராடினர். சைவ சின்னங்களை அணிந்து பெருமானைப் பூசிக்க எண்ணினர். பரிசனத்தோர் பூசைக்குரிய பொருள்கள் யாவற்றையும் சேகரித்தனர். அம்பிகை இன்பத்தை உதவுகின்ற முத்தியின் தன்மையைத் தெரிந்து கொள்ளும்படி பூசிப்பவராதலால் இனிய சுவையைத் தருவதாகிய நீரைக்கொண்டு சிவலிங்கம் அமைக்க எண்ணினார். எங்கும் நிறைந்த பூரணமாகிய பரமனின் திருவடிகளைத் தியானித்துத் தீர்த்தத்தையே திரட்டி ஒளிபொருந்திய லிங்கமாகச்செய்து தாபித்தார் தேவியார். இதனால் அப்புலிங்கமெனப் பெயர் ஏற்பட்டது. தேவியாருடைய பக்தி பெருகுவதுபோல் அவ்விடத்திலிருந்து தீர்த்தம் பெருகியது. அதற்கு ஸ்ரீமத் தீர்த்தமென்று பெயருண்டாயிற்று. தேவியார் முறைப்படி பெருமானுக்கு அபிஷேகம் செய்தார். பலவகை மலர்களாலும் ஆபரணங்களாலும் அலங்கரித்தார். அறுசுவை அமுதுகளால் நிவேதித்தார். மெய்ம்மறந்து துதிசெய்தார். இவ்வாருகத் தினமும் பூஜை நிகழ்ந்துவருங் காலத்தில், ஒரு நாள் பெருமான் வெள்விடையில் தேவியாருக்குக் காட்சி கொடுத்தார். தேவியாரும் ஊனக் கண்ணால் உணராப்பதியை ஞானக்கண்ணால் தரிசித்தார். தம் பொருட்டில்லாமல் பிற உயிர்களின் பொருட்டுப் பல வரங்களை வேண்டிப் பெற்றார்.

பிறகு தேவியார் பெருமானிடம் தாம் கைலையில் ஆதியில் கேட்ட சந்தேகத்தை விளக்கியருளும்படி

வேண்டினார். பெருமான் உமாதேவியை நோக்கி "நீ யோகத்தின் உண்மையைக் குறித்து வினவினை. கேட்பாயாக: உலகங்கள் யாவும் நமது அருள் வழியே நடப்பன. ஆதலால் கூத்தாட்டத்தைக் கற்பிப்பவன் முதலில் தான் ஆடிக்காட்டுதல் போல முதலில் நாமே உலகத்தைப் பயிற்ற வேண்டும். ஆதலால் உலகத்தில் உள்ள ஆன்மாக்கள் போகத்தை நுகரும் வண்ணம் உன்னைத் தழுவிப் போகியாகவும், யோகத்தைச் செய்து மெய்ஞ்ஞானத்தையடைந்து மோட்சம் அடையும் வண்ணம் யோகியாகவும் இருந்தோம்" என்று உபதேசிக்கவும் தேவியார் மிகவும் மனம் மகிழ்ந்தார்.

இவற்றைக்கேட்ட அம்பிகை மீண்டும் பெருமானிடம் "மலம், ஜீவன், மாயை, கர்மம், மெய்ஞ்ஞானம் முத்தி ஆகிய இவைகளையும் அடியேன் அறிந்து கொள்ளும்படி உபதேசிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தார். பெருமானும் அவற்றின் இயல்புகளை எல்லாம் தெளிவாய் உபதேசித்தருளினார். அம்பிகையும், மற்றையோரும் கேட்டு மகிழ்வெய்தினர். அம்பிகை உபதேசம் பெற்றதை உணர்த்த, சுவாமி சந்நிதி மேற்கு நோக்கியும், அம்மன் சந்நிதி கிழக்கு நோக்கியும் அமைந்துள்ளன. இவ்விதம் அமைவது உபதேச ஸ்தலம் எனப்படும்.

## (5) இராமர் வழிபட்டது

இராமர் வனவாசஞ் செய்த காலத்தில் இராவணன் சீதையை எடுத்துச் சென்றான். இராமபிரான் மிகத் துயரமுற்று இலக்குமணனுடன் புறப்பட்டுச் சென்று கிஷ்கிந்தையை அடைந்து சுக்கிரீவனுடன் நட்புக் கொண்டார். அனுமான் மூலமாகச் சீதையின் இருப்பிடத்தை அறிந்தார். பின்பு வானரச் சேனைகளுடன் புறப்பட்டுச் சென்று

கடலில் அணைகட்டி இலங்கையில் பிரவேசித்து இராவணனை யும் கும்பகர்ணனையும் மற்ற சேனைகளையும் போரில் கொன்று விபீஷணனை இலங்கைக்கு அரசனாக்கிச் சீதையை மீட்டுக் கொண்டு திரும்பினார். வரும்போது இராவணன் கும்பகர்ணன் ஆகிய இருவர்களுடைய சாயைகள் இராம ருடன் பின்தொடர்ந்து அச்சுறுத்தின. இராமர் அவை களை அகற்றக் கருதி இராமேசுவரத்தில் சிவலிங்கப் பிர திட்டை செய்து பூஜிக்க இராவணனுடைய சாயைமட்டும் நீங்கியது. கும்பகர்ணனுடைய சாயை நீங்காமல் தொடர்ந்து வருவதைக்கண்ட இராமர் இதை எவ்வாறு போக்கலாம் என்று கவலை கொண்டு வரலானார். ஜம்பு கேசுவரத்தின் எல்லை வந்தவுடன் அந்தச் சாயை சூரியனைக் கண்ட இருள்போல் நீங்கியது. இராமர் மிகவும் மகிழ்ந்து பல தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து சந்நிதியிற் சென்று வணங்கி அமுத நாயகரையும் அகிலாண்ட நாயகியையும் தரிசித்தார். பின்பு இராமர் ஆங்கிருந்த முனிவர்களைக் கண்டு அந்தச் சாயை வந்த வகையையும், இத்தலத்தின் எல்லையில் மறைந்ததையும் தெரிவித்தார். அவர்கள் இராம ரிடம் "மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றிலும் சிறந்ததாகிய இத்தலத்தில் பேயும், சாயையும், நோயுமாகிய தீமைகள் அணுகமாட்டா. இத்தலத்தின் எல்லையைக் கடந்தால் அச்சாயை மீண்டும் தொடரும். அது எவ்விடத்தும் வராத படி இவ்விடத்தில் சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூசித்துப் போக்கிக் கொள்க", என்று தெரிவித்தார்கள்.

இராமர் அங்கதனை அழைத்து ஓர் சிவலிங்கம் கொண்டுவரும்படிக் கட்டளையிட, அவன் ஓர் மரகத லிங்கத்தைக் கொண்டு வந்து கொடுத்தான். இராமர் சந்நிதிக்கு மேற்கில் ஓர் தீர்த்தம் அமைத்து அதன் அரு கில் ஓர் ஆலயம் எடுத்து அதில் விதிப்படி புதிய லிங்கத்

தைப் பிரதிட்டை செய்து பூஜித்து உள்ளம் உருகும்படி பெருமானையும் தேவியையும் துதித்தார்.

" எண்ணிலுயிர்க்குந் தனதருளை யீயும் பொருட்டுப் பலவுருவாய்
நண்ணி யுலகுக் கைந்தொழிலு நடத்தி யந்த வுலகத்திற்
பண்ணினிசையும் மலர் மணமும் பழத்தின் சுவையுமென நிற்கும்
அண்ணலெவனோ அவனடியை யன்பினோரப் பரசுவேன்."

" அஞ்சலெனவமைத்த வொரு கரதலமும் வரதமென வமைத்த [கையும்
கஞ்சமல ரேந்துமிரு கரதலமு மூற்றிருக்குங் கருணை நோக்கும்
பஞ்சிகமழ் சிறடியு மழகெறிப்ப வணிகலன்கள் பலவுந்தாங்கி
வஞ்சமல விருள் சிக்கு மகிலாண்ட நாயகிதன் வடிவம்போற்றி "

இராமர் இவ்வாறு துதி செய்யப் பெருமான் தேவியுடன் காட்சி கொடுத்தார். இராமர் கண்களில் நீர் பெருகப் பேரானந்தத்துடன் தரிசித்தார். மனம், மொழி, மெய்களால் வழிபட்டார். பின்பு அயோத்தியடைந்து அரசாட்சி செய்தார். இராமரால் தாபிக்கப்பட்ட மூர்த்தி நீலகிண்டீசுவரர் என வழங்குகிறது. இம் மூர்த்தியை வழிபட்டோர் பேய், பிணி, முதலிய துன்பங்களிலிருந்து நீங்குவர். இவரால் அமைக்கப்பட்ட தீர்த்தம் இராம தீர்த்தம் எனப் பெயராகி அதில் ஆண்டு தோறும் தை மாதத்தில் தெப்பத்திருவிழா நடைபெறுகிறது.

## (6) பெருமான் முத்தாரம் பூண்டது.

காவிரி பாயும் சோழநாட்டிற்குத் தலைநகரான உறையூரில் சோழன் ஒருவன் அரசுபுரிந்துவந்தான். அவன் பகையரசர்களை வென்று புகழ்கொண்டவன். சிவபெருமானிடத்தும் சிவனடியார்களிடத்தும் மிக அன்பு பூண்டவன். அவன் சிவபெருமான் எழுந்தருளிய திருக்கோயில்களில் நித்திய நைமித்திக பூசைகளைக் குறைவில்லாமல் நடத்தி வந்தான். அப்போது பனிக்காலம் நீங்கி வேனிற்காலம் தொடங்கியது. வெப்பம் மிகுந்தது. நாட்டில் உள்ளவர்

கள் எல்லாம் சோலைகளிற்சென்று நறுமணங்கமழும் தென் றற்காற்றை எற்றும், காவிரியில் நீராடியும் வெப்பத்தைப் போக்கும் வகையில் நகர்ப்புறங்களில் வசிப்பாராயினர். அக்காலத்தில் உறையூரை ஆண்ட சோழன் ஞானக்ஷேத் திரமாகிய திருவானைக்காவலில் உறையும் பெருமானுக்கும் வெப்பகற்றும்படி பல பொருள்களை அனுப்பித் தானும் மனைவியுடன் தரிசனம் செய்யப்புறப்பட்டான். தன் மனைவியின் மார்பில் இருந்த முத்தாரத்தைக் கண்டு அதைப் பெருமானுக்குச் சாத்த நினைத்து காவிரியில் தானும் தன் மனைவியும் நீராடும்போது மனைவி அணிந்திருந்த முத் தாரம் ஆற்றில் நழுவிவிட்டது. அரசன் மிகவும் கவலை யுற்றான். பெருமானை நினைந்து பலவாறு போற்றிக் காவிரிக் கரை கடந்து திருவானைக்காவலுக்கு வந்து பெருமானைத் தரிசித்தான். அப்போது கோயில் பூஜகர்கள் முன்னரே காவிரியிலிருந்து கொண்டுவந்த திருமஞ்சனத்தை அபிஷே கஞ்செய்தனர். சிவபெருமானுடைய திருவருளால் காவிரி யில் தவறிய முத்தாரம் திருமஞ்சனக் குடத்தினுள் புகுந்து அபிஷேகஞ் செய்யும்போது தீர்த்தத்துடன் பெருமானு டைய திருமுடியில் விழுந்தது. எல்லோரும் கண்டு வியப் படைந்தனர். அரசனும் கண்டு அதிசயித்துப் பெருமானை நோக்கி

“ சம்புமூலத்தின் வீற்றிருந்தருளிய தலைவ !
எம்பிரானின தருளெனக்கிருந்தவா றென்னே
வம்பு நீணதிகெடுத்தமாரை நின்முடிமேல்
உம்பராருநன் றதிசயமுற வணிந்தனையே ”

என்று போற்றினன். அந்த அரசனுடைய புகழ் இன் றைக்கும் உலகத்தில் நிலைபெற்று விளங்குகின்றது. இந் நிகழ்ச்சியை சுந்தரமூர்த்தி நாயனரும் தாம் இயற்றிய

தேவாரத்தில் 'தாரமாகிய பொன்னி' என்னும் பாடலைப் பாடியிருக்கிறார். அப்பாடல் பின்னே சேர்க்கப்பட்டிருக்கிறது.

## (7) திருநீற்றுமதில் வரலாறு.

கோச்செங்கட்சோழனும், பிறவேந்தர்களும் கூடிக் கோயிற் திருப்பணிகளைச் செய்துவரும் காலத்தில் பெருமானது திருவருளால் "பெரியமதில் நீங்கலாக மற்றய பணிகளைச் செய்யுங்கள்" என்று விண்ணில் ஒரு மொழி உண்டாயிற்று. எல்லோரும் அவ்வாறே பிறதிருப்பணிகளைச் செய்யலானார்கள். அப்போது பெருமான் காவி உடை உடுத்துசடை முடிதரித்து அக்கமணியுடன் திருநீறணிந்து ஒரு துறவியாகி வந்தார். தச்சர் முதலிய தொழிலாளர்களைக்கொண்டு திருநீற்றுமதிலைக்கட்டத் தொடங்கினர். கூலியாட்களுக்கு திருநீற்றையே கூலியாகக் கொடுத்தார். அவரவர் வேலைக்குத் தக்கபடி பொன்னாக மாறியது. துறவியாக வந்த சித்தர், கண்டவர் வியக்கும்படி பல அற்புதங்களைச் செய்தார். மதிலை பூமிக்குள் மறையும்படியும், மீண்டும் உயரும்படியும் அமைத்துக் காட்டினார். பிறகு எல்லோரையும் பார்த்து "எல்லாச் சித்துக்களையுமுடைய எமது பொருள்களை இம்மதிலில் வைத்துவிட்டோம்; ஆதலின் வரங்களைப்பெற விரும்புவோர் இந்த மதிலை வலம் வருக என்று கூறினார். அன்றுமுதல் உலகத்து மக்கள் மகப்பேறு கருதியும், செல்வம், வெற்றி, இன்பம் முதலியவைகளைப்பெற விரும்பியும் இந்த மதிலை வலம் செய்து வேண்டிய வரங்களைப் பெறுகிறார்கள். திருநீற்றைக் கூலியாகக் கொடுத்துக் கட்டப்பெற்றதால் திருநீற்றுமதில் அல்லது விபூதிப்பிரகாரம் எனப் பெயர் ஏற்பட்டது.

மதிலினைச் சூழ்வாமென்று மனையகந்தன்னை நீங்கிற்,
பொதிதரு பாவமாதிப் புல்வினையவனை நீங்கும்
எதிர்கொளின் வரங்களெலா மெதிர்கொளும்கதுவின
கதுவுறுஞ்சூழிற் சூழுங்கரிசறுமுத்தி நான்கும் [ஞானங்

## (8) பெருமான் முறைசெய்தது.

ஒரு காலத்தில் இத்தலத்தில் பெருமானைப் பூஜித்து வந்த பூஜகர்கள்—சிவத்துவிஜர்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யாமல் சிவாலயப் பொருள்களைக் கவர்ந்தும் உரிய காலங்களில் பூஜை செய்யாமல் தாமதித்தும், ஆசாரங்களிற் குன்றியும் இவ்வாறு தகாதனவற்றைச் செய்து வந்தமையால் பெருமான் சினங்கொண்டு அவர்களைத் தண்டிக்கத் திருவுளங்கொண்டார். ஒரு நாள் பிக்ஷாடன மூர்த்தி விழாவின்போது ஒரு சிறுவனை வைத்துவிட்டு எல்லோரும் அயலூருக்குப்போகப் புறப்பட்டுக் கொள்ளிடத்தைக் கடப்பதற்குத் தோணி ஏறினார்கள். பெருமான் திருவருளால் ஒரு புயல் வீசியது. எல்லோரும் வெள்ளத்தில் வீழ்ந்து உயிர் நீத்தார்கள். எல்லோரும் இச்செயலைக் கண்டு அஞ்சினார்கள். அமுதலிங்கேசர் வெள்ளத்தில் இறவாத சிறுவனுக்கு அருள்செய்து வேதாகமங்களை அருளி மேன்மைதரும் பணிவிடையில் வைத்தார்.

“ இரும்புனனதியிற் செல்லாதெஞ்சிய சிறுவன்தன்னைப்
பெரும்பெயர்ப் பொருளாயுள்ளார் பேரருட்கிலக்கமாக்கி
அரும்பொருட்கலைகள் வேதாகமங்களுமருளி மேன்மை
தரும்படிவிடையின்வைத்தார் சகமெலாமிறும்பூதெய்த ”

## 15. சரித்திர வரலாறு

“ ஸ்ரீரெங்கம் கோவிலும் திருவானைக்காவும் சேர்ந்து ஒரே தீவாகும். அதில் ஸ்ரீரங்கம் மேற்கிலும் திருவானைக்கா

கிழக்கிலும் உள்ளன. 18-ம் நூற்றாண்டில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் நடந்த கர்நாடகப் போரில் இவ்விரு பெருங்கோயில்களும் கோட்டைகளாக உபயோகப்பட்டன. 1752-ம் ஆண்டில் ஏப்ரல் மாதத்தில் சந்தா சாகிபும் பிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேயருக்கு முன் நிற்க மாட்டாமல் பின் வாங்க நேரிட சந்தா சாகிப் ஸ்ரீரெங்கத்திலும், பிரெஞ்சுக்காரர் திருவானைக்காவலிலும் தத்தம் சேனைகளுடன் புகலிடமாகக் கொண்டு தங்கியிருந்தனர்.

பின்னர் பிரெஞ்சுக்காரர் சரணமடையவே அத்தீவை ஆங்கிலேயர் தங்கள் சார்பிலிருந்த மைசூர் துருப்புகளிடம் கொடுத்துவிட்டனர். அப்பொழுது திருவானைக்காவல் மைசூர்காரரின் முக்கிய அரணும் இருப்பிடமாகவும் விளங்கிற்று. ஆயினும் அவ்வருட முடிவில் அவர்கள் துரோக சிந்தனையை உணர்ந்த டால்டன் என்னும் ஆங்கில ராணுவ வீரன் அவர்களைத் தாக்கவே அதில் பலர் மாண்டனர். எஞ்சியவர் தீவின் மேற்கிலுள்ள ஸ்ரீரெங்கத்துக்குள் ஓடித் தஞ்சம் புகுந்தனர்."

எனவே கர்னாடக யுத்தகாலத்தில் இக் கோவில் ராணுவக் கோட்டையாக விளங்கியது என்பது புலனாகின்றது. (Gazetteer)

## 16. கல்வெட்டுக்கள்

இக் கோயிலில் 2-வது, 3-வது, 4-வது பிரகாரங்களிலும், அம்மன் கோவிலிலும் சுமார் 40 கல்வெட்டுக்கள் உள்ளன. அவைகள் கவர்ன்மெண்டாரால் அவ்வப்போது நகல் எடுக்கப்பட்டுள்ளன. அவை 1891-ம் ஆண்டில் 18 முதல் 32 எண்களிலும், 1903-ம் ஆண்டில் 61 முதல் 67 எண்களிலும், 1905-ம் ஆண்டில் 499 முதல் 508 எண்

களிலும், 1908-ம் ஆண்டில் 480 முதல் 487 எண்களிலும் 1910-ம் ஆண்டில் 92 எண்ணிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இக் கல்வெட்டுச் செய்திகளிலிருந்து பழமையான சில உண்மைகளை அறியலாம். சில கல்வெட்டுக்கள் சிதைந்து போனதாகத் தெரிகிறது.

1. முற்காலத்தில் இந்தப் பிரதேசம் தென்கரைப் பாண்டிகுலாசனி வளநாடென்று வழங்கியதும், இதைச் சோழ மன்னர், பாண்டி மன்னர், ஹொய்சல மன்னர் முதலிய அரசர்கள் வெவ்வேறு காலங்களில் ஆட்சி புரிந்து வந்ததும், அவர்கள் மிகுந்த பக்தியுடன் கோவிலுக்கு வேண்டிய பல தானங்கள் செய்த விவரமும் மன்னர்கள் திரிபுவனசக்கரவர்த்தி என அழைக்கப்பட்டு வந்ததும், மூலமூர்த்தி உடையார் எனக் கூறப்பட்டு வந்ததும் தெரிய வருகின்றன.

2. கண்ணனூர் என்று சொல்லப்படுகின்ற சமயபுரம் ஹொய்சலமன்னனான வீரசோமேசுவர தேவன் காலத்தில் விக்ரமபுரம் என்று வழங்கி வந்த விவரமும், இவ்விடத்தையே அரசன் தன் இருப்பிடமாகவும், தலைநகராகவும் கொண்டு வாழ்ந்து வந்த செய்தியும் புலனாகின்றன.

3. ஆசுகவியில் வல்ல காளமேகப் புலவர் இத்தலத்தில் அம்பிகை மூலமாய் அருள் பெற்றார். மிகுந்த வறுமை நிலையிலுள்ள இப்புலவரைச் சாளுவ மன்னனான திருமலைராயன் மிகுந்த செல்வங் கொடுத்து உயர்நிலையாக்கியதைப் புலவரே தம்பாட்டில் பாடியுள்ளார்.

இவைகளிற் சில பின்னே காட்டப்படும் :—

1. திரிபுவனச் சக்கரவர்த்தி கோ. ராஜகேசரி வர்மன் என்னும் மூன்றும் ராஜராஜசோழதேவன் (கி. பி.

1245) ராஜகேசரி வர்மன் முதலாம் குலோத்துங்கசோழ தேவன் (கி. பி. 1117) திரிபுவனச் சக்கரவர்த்தி மூன்றும் குலோத்துங்கசோழ தேவன், ராஜேந்திரசோழ தேவன் என்னும் சோழர்கள் காலத்தில் இக்கோயிலுக்கு நிலங்கள் தானம் செய்யப்பட்ட செய்திகள் தெரியவருகின்றன.

2. கோ. ஜடவர்மன் சுந்தரபாண்டியதேவன் (கி. பி. 1251-64). கோ. மாறவர்மன் குலசேகர தேவன் (கி. பி. 1278) இவர்கள் காலத்திலும் காகத்திய மன்னனை பிரதாப ருத்திரதேவன் காலத்திலும் நிலங்கள் தானம் செய்யப்பட்ட குறிப்புக்கள் உள்ளன. நான்காம் பிரகாரத்தின் கீழ்த்திசையில் உள்ள பெரியகோபுரம் சுந்தரபாண்டியனல் கட்டப்பெற்றதாகச் சொல்லப்படுகிறது.

3. சுவாமிகோயில் மூன்றும் பிரகாரத்தின் வட சுவரில் ஹொய்சல மன்னன் வீரசோமேசுவர தேவன் காலத்தில் (கி. பி. 1253) ஏற்பட்ட கல்வெட்டு உள்ளது. இம் மன்னன் விக்கிரமபுரம் என்னும் கண்ணனூரில் (சமய புரம்) பொய்சலேசுவரர் கோவில் அமைத்த செய்தி சொல்லப்பட்டுள்ளது. பொய்சலேசுவரர் கோவில் தற்காலத்தில் போஜராஜா கோயிலென வழங்குகிறது.

ஜம்புகேசுவரத்தில் இம்மன்னன் தன் பாட்டனர், பாட்டியார், தந்தையார் மனைவி ஆகியோருக்கு உருவங்கள் அமைத்து வழிபட்ட செய்தியும் சொல்லப்பட்டுள்ளது. இவர்கள் முறையே வல்லாளர், பத்மலா, 2-ம் நரசிம்மன், சோமலாதேவி எனப்படுவோராவர். சோமலா தேவியிடம் சில பொருள்கள் தானம் செய்த விபரம் உள்ளது. இக்கல்வெட்டால் சமயபுரம் கோயில் இக்கோயிலின் தொடர்பில் இருந்ததாகத் தெரியவருகிறது.

(இவ்வரசன் கர்நாடக தேசத்துக்குச் சந்திரன் (Moon of the Carnatic) என்ற பட்டத்தைப் பெற்ருன். திருவாசிக் கோயிலும் இவனுல் கட்டப்பட்டதாகத் தெரிய வருகிறது. ஸ்ரீரெங்கத்துக்குப் பக்கத்திலுள்ள வீரசோமேஸ்வரமும், வயலூருக்குப் பக்கத்திலுள்ள சோமேஸ்வரன்பேட்டையும் இவன் பெயரால் விளங்கும் இடங்களாகும். இவை *தற்காலத்தில் வீரேஸ்வரம் என்றும், சோமரசம்பேட்டை என்றும் வழங்குகின்றன.)

மேற்படி வீரசோமேஸ்வர மன்னனின் மகன் பிரதாப்ச் சக்ரவர்த்தி வீரராமநாத தேவன் காலத்திலும் கி. பி. 1271) நிலங்கள் தானம் செய்யப்பட்ட செய்தி தெரியவருகிறது.

4. அம்மன் கோவிலில் தென்சுவரில் சாளுவ மன்னனை கோப்பராஜன் மகன் திருமலைராயன் (கி. பி. 1450-80) ஓர் திருவாபரணம் தானம் செய்த செய்தி சொல்லப் பட்டுள்ளது. இவ்வரசனே காளமேகப் புலவருக்குப் பெருஞ் செல்வமளித்து அவருடைய வறுமையைப்போக்கினுன்; இச்செய்தியைப் புலவரே "என்னை நிலைசெய் கல்யாணிச் சாளுவத் திருமலைராயன் மந்தர புயனுங் கோப்பயனுதவு மகிபதி விதரண ராமன் வாக்கினுற் குபேரனுக்கினுன்" என்று பாடியுள்ளார்.

5. ஸ்ரீ சங்கராச்சாரியார் மடத்து மேல்சுவரில் திரிபுவனச் சக்ரவர்த்தி கோனேரி மேக்கொண்டான் என்பவன் (கோன் நேர் இன்மைகொண்டான் The unequalled among Kings) காலத்தில் அவுருடையான் சோழகனுல் கோயிலுக்கு வடக்கில் நாற்பத்தெண்ணுயிரவர் மடம் அமைக்கப்பெற்றதும், அன்ன தானம் அளிக்கப்பெற்ற

தும் கூறிப்பட்டுள்ளன. இவனே திருப்பைஞ்ஞீலிக் கோயிலின் கோபுரம் முதலிய திருப்பணிக்கு நிலங்கள் தானம் செய்துள்ளான்.

6. சுவாமி கோயில் இரண்டாம் பிரகாரத்தின் வட சுவரில் சோழ மன்னன் வாலக காமயர் என்னும் அலக்க ராஜன் என்பவனால் வடகரை வெண்கோன்குடி கிராமத்திலிருந்து ஒரு வேலி நன்செய் நிலம் தானம் செய்யப்பட்ட செய்தி சொல்லப்பட்டுள்ளது. இவன் சோழர்களுக்குள் ஸ்ரீமனென்றும், மகாமண்டலேசுவரனென்றும் பட்டப் பெயர்கள் சூடியிருந்தான், பிலவ ஆண்டில் (சகம் 1403-ல்) கும்ப (மாசி) மாதத்தில் பௌர்ணமி திதியில் ஞாயிற்றுக் கிழமையில் நேர்ந்த மகாமகப் புண்ணிய தினத்தில் (3–2–1482 கி. பி,) இந்த நன்கொடையைச் செய்ததாகத் தெரிய வருகிறது. இக்கல்வெட்டில் நகல் மாதிரிக்காகப் பின்னே காட்டப்பட்டிருக்கிறது. அதன் விவரம் :—(30-1891)

“சுபமஸ்து. ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் ௲௪௱௩ இதன் மேல் செல்லாநின்ற பிலவ ஸம்வத்ஸரத்து கும்பநாயற்று பூர்வபக்ஷத்து பூறணையும் ஆதித்தவாரமும் பெற்று மகத்து நாள் ஸிம்ம பிரஹஸ்பதி மஹாமக புண்ய காலத்திலே ஸ்ரீமந் மஹா மண்டலேச்வரந் சோழர் ஸ்ரீமந் சோழ நாராயணன் உரையூர் பூர்வரா தீச்வரந் வாலக காமயர் ஆந அக்கல ராசர் நாயனார் அழகிய திருவானைக்காவுடைய நாயனார் கோயில் ஆதிசண்டேச்வர தேவர் கன்மிகளுக்கு குடுத்த தன்ம சாதனப்பட்டயம். நாயனார் அழகிய திருவானைக்காவுடைய நாயனார் வடகரை வெண்கோன் குடியில் (வெங்கங்குடி) திருவெட்டை ஆக எழுந்தருளுகிற திருநாள் மண்டபச் சிறப்புக்கும் நாச்சியார் அகிலாண்ட நாயகியாற்குக் கால சந்தியாக அமுது செய்தருளி தன்மவெச்ச

மாக நடக்கிற ஒருதளிகை அமுது படிக்கும் திருமார்கழிச் சிறப்பு அமுது செய்யவும் திருநன் தவனம் பயிர் செய்கிற தோப்பு ஆள் இலக்கைக்குமாக நம்முடைய நாயகக் கட்டணமான வடகரை வெண்கொன் குடியில் செத்த இராஜவிபாடன் நிலம் வேலி இந்த நிலம் வேலிக்கும் உண்டான கரம் பொன் முதல் நெல்முதல் உண்டானது முன் எழுதின வகைப்படியிலே சந்திராதித்த வரையும் அனுபவித்தும் கொள்ளக் கடவராகவும். இந்த தன் மத்துக்கு அகுதம் பண்ணினவன் உண்டானால் கங்கைக் கரையிலே கோவதையைக் கொன்ற பாவத்திலே போகக் கடவாராகவும்."
(S. I. I.)

"This inscription is engraved on the north wall of the second prahara of the siva temple of Jambukeswara near Srirangam in the Trichinopoly District. It records the grant of one veli of land in the village of Vadagarai Venkonkudi to the God of Tiruvanaika by a provincial chief Valakakamaya alias Akkalaraja. He styles himself a Bhima among the cholas. He bears also the title Mahamandaleswara which suggests that he was a subordinate chief, probably, under one of the last kings of the first Vijayanagara dynasty. The grant was made on the auspicious day of Mahamagha which fell on sunday, the full-moon thithi in the month of kumba in the Plava Year Saka Samvat 1403. This corresponds to 3rd February 1482 A. D." (S. I. I.)

7. 31–1891. 2-ம் பிரகாரத்தில் கிழக்குச் சுவரி லுள்ள கல்வெட்டு ராஜகேசரி வர்மன் முதலாம் குலோத் துங்க தேவ சோழனது ஆட்சியில் 47-வது ஆண்டில் கி. பி. 1117-ல் வல்லபராயன் என்பவன் ரிஷபவாகனம் அமைத்துக் கொடுத்ததுடன் பூஜைக்காரியங்களுக்கு நிலம் வழங்கியிருப்பதாகவும் தெரிகிறது. அதன் விவரம் :—

"இந்நிலம் நாலேமுக்காலும் இத்தேவர்க்கு யாண்டு நாற்பத்தேழாவது வரை பயிரிலிபுஞ் செய்யாய்க் குட்டமு மண்ணுமிட்டுக் கிடந்தமையிலந் நிலம் முனையந் அருமொழி தேவநான வில்லவராயனுக்கு விற்றுக்குடுத்துக் கொள்வ தாக எம்மிலிசைந்த விலைபொருள் அத்ருடு நற்காசு சப— இக்காசு நாலேமாகாணியுங் கைக்கொண்டு திருவானைக் காவுடைய எம்பெருமாள் ஸ்ரீ பண்டாரத்து ஒடுக்கி முனை யந் அருமொழி வில்லவராயனுக்கு விற்றுக்குடுத்து இவந் உடையார் திருவானைக்காவுடைய எம்பெருமான் கோயிலே இடங்கை நாயகரென்று எழுத்தருவித்த இஷபவாகன தேவர்க்கும் நம்பிராட்டியாருக்கு திருமஞ்சனங்களுக்கு திருவமிர்து படிக்கு இரண்டு திருநாளிலும் இரண்டுநாள் திருவிழா எழுந்தருளுகைக்கு உள்ளிட்டு வேண்டும் நிமந் தங்களுக்கு இந்நில சளுகல்லித்திருத்தி ஸ்ரீ பண்டாரத்து புஞ்செய் வரிசையால் வேலி ஒன்றுக்கு நெல் ஐங்கலமாக ராஜகேசரி மரக்காலால் இந்நிலம் நாலே முக்காலுக்கும் அளப்பதாக நெல்—இந்நெல் இருபத்து முக்கலனே இரு தூணிக் குறுணியும் அளக்கு மிடத்தில் கார்பாதி பசாநம் பாதி அளப்பதாகவும் இதில் மிகுதிகொண்டு இவந் இடங்கை நாயகரென்று எழுந்தருளுவித்த இஷபவாகன தேவர்க்கும் நம்பிராட்டியார்க்கும் திருமஞ்சன படிகளுக்

கும் திருவமுது படிக்கும் இரண்டு திருநாளிலும் இரண்டு நாள் எழுத்தருளுகைக்கு உள்ளிட்டு வேண்டு நிமந்தங்களுக்கு நிமந்தஞ் செய்து குடுத்தோம்.''

## 17. வருமானம், சொத்துக்கள் முதலியன

**நிலங்கள்** :—திருச்சி ஜில்லா திம்மராய சமுத்திரம் கொண்டயம்பேட்டை, வெள்ளித் திருமுத்தம், இனும் ஜம்புகேஸ்வரம், திருவளர்சோலை, மல்லியம்பத்து, அப்பாத்துறை, கல்லுக்குடி ஆகிய கிராமங்களில் நன்செய், புன்செய் நிலங்களும், உடையார்பாளையம் தாலூகா தேவாமங்கலத்தில் இனும் புன்செய் நிலங்களும் இருக்கின்றன. வடத்தலாம்பட்டி, ஜகதாபி, துலையாநத்தம் என்னும் கிராமங்களில் பகுதித் தீர்வைமட்டும் வசூலிக்கப்பட்டு வருகிறது. அன்றியும் கோயிலுக்குச் சொந்தமான கடைகளும், வீடுகளும், தோப்புக்களும் உள்ளன.

இவைகளின் மூலமாய் ஆண்டுதோறும் சுமார் 10,000, ரூபாயும், சர்க்கார் மோஹினி மூலமாயும், உண்டியல், காணிக்கை, உபயம் ஆகிய இவைகளின் மூலமாயும் சுமார் 23000 ரூபாயும் வருமானம் கிடைக்கின்றன. கல்வெட்டுச் செய்திகளில் இக்கோயிலுக்கு மிகுந்த சொத்துக்கள் இருந்தனவாகத் தெரிகிறது சுமார் லட்ச ரூபாய் மதிப்புள்ள திருவாபரணங்கள் உள்ளன. சுமார் 20,000 ரூபாய் மதிப்புள்ளனவாய் வெள்ளிமயில், வெள்ளி ரிஷபம், வெள்ளி விமானங்கள், தங்கத் திருவாசிகைகள் முதலியன இருக்கின்றன. சுமார் 30,000 ரூபாய் மதிப்புள்ள இரண்டு பெரிய ரதங்களும் தேர்ச்சேலைகளும் உள்ளன. தேவஸ்தானத்தைச் சேர்ந்த ஓர் நூல் நிலையம் உண்டு.

## 18. நிர்வாகம்

இக்கோயிலின் நிர்வாகம் 1842-ம் வருடம் வரையில் சர்க்கார் கண்காணிப்பில் இருந்து வந்தது. பிறகு சில ஆண்டுகள் வரையில் திருச்சி வட்டார தேவஸ்தானக் கமிட்டியின் நிர்வாகத்தில் இருந்து வந்தது. தற்போது சென்னை இந்துமத தர்ம பரிபாலன பாதுகாப்புப் போர்டாரால் Scheme ஏற்படுத்தப்பட்டு 26—1—46 முதல் நிர்வாக அதிகாரி ஒருவர் (Executive Officer) நியமிக்கப் பெற்று 7-2-46 தேதியிலிருந்து வேலை பார்த்து வருகிறார். இப்போதுள்ள நிர்வாக அதிகாரியும் கோயில் வேலைகளை ஊக்கத்துடன் கவனித்து வருகிறார். மற்ற தர்மகர்த்தர்களும் இக்கோயிலின் முன்னேற்றங் கருதி அவ்வப் போது வேண்டுவன கூறி ஊக்கி வருகின்றார்கள்.

தற்போதுள்ள மானேஜிங் டிரஸ்டி திரு- சா- ராம, சித. பழனியப்பச் செட்டியார் அவர்கள், தங்கள் முன்னோர்களுடைய குலப்பெருமைகளுக்கேற்ப இக்கோயில் காரியங்களையும். திருப்பணி வேலைகளையும், கண்ணும் கருத்துமாய்க் கவனித்து வருகிறார்கள். நவராத்திரி விழாக் காலங்களில் நாட்டிலுள்ள பல அறிஞர்களைக்கொண்டு சமயச் சொற்பொழிவுகள் நடைபெறவும், பிரபல சங்கீத வித்வான்களைக் கொண்டு இசைக் கூட்டங்கள் நிகழவும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்கள். தற்போதுள்ள தர்மகர்த்தர்களாகிய திரு, C. சுப்பிரமணிய பிள்ளை அவர்களும், திரு. C. நமசிவாயம் பிள்ளை அவர்களும் மேற்படியாருடன் ஒத்துழைத்து தேவஸ்தான அலுவல்களை ஊக்கத்துடன் கவனித்து வருகிறார்கள்.

இதற்கு முன் இக்கோயிலில் பொதுக் குடும்பத்தைச் சேர்ந்த காலஞ் சென்ற திரு. ராமசாமி செட்டியார்

திவான் பகதூர் திரு. சபாரெத்தினம் செட்டியார், திரு. ஐம்புலிங்கஞ் செட்டியார் ஆகியோரும், காலஞ் சென்ற திரு. கந்தசாமி உடையார், திரு. சி. மு. அரு. நாராயணஞ் செட்டியார், திரு. அருணுசலம் செட்டியார், திரு. பச்சையா பிள்ளை, திரு. G வரதராஜன் B.A., ஆகியோரும் தர்மகர்த்தர்களாய் இருந்து தொண்டு புரிந்து வந்திருக்கிறுர்கள். அவர்கள் எல்லோருக்கும் தேவியார் அருள்வாராக.

சிலந்தி நூலால் வழிபட்டுப் பேறுபெற்றதுபோல இவ்வாலாற்றைப் படிப்போர் யாவரும் பின்னே சேர்க்கப் பெற்றுள்ள துதி நூலாகிய பாடல்களையும் பக்தியுடன் பயின்று திரு ஆனைக்காவல் அண்ணலின் திருவருளைப் பெற்று எண்ணிய பயன்களை எளிதில் எய்தித் துன்பம் நீங்கி இன்பம் அடைவார்களாக.

## 19. இலக்கியங்கள்

### தேவாரமும் தனிப் பாடல்களும்

(1) இத்தலத்துக்குத் தேவார ஆசிரியர் மூவரும் பாடிய 7 பதிகங்கள் உண்டு. அவைகளுள் **திருஞான சம்பந்தர் அருளியவை.**

மழையார் மிடறு மழுவா ளுடையாய்
உழையார் கரவா வுமையாள் கணவா
விழவா ருவெண்ணா வலின்மே வியஎம்
அழகா வெனுமா யிழையா ளவளே. 1

வெண்ணா வலமர்ந் துறைவே தியனைக்
கண்ணார் கமழ்கா ழியர்தந் தலைவன்
பண்ணோ டிவைபா டியபத் தும்வல்லார்
விண்ணோ ரவரேத் தவிரும் புவரே. 2

வானைக் காவில் வெண்மதி மல்குபுல்கு வார்சடைத்
தேனைக் காவலின்மொழித் தேவி பாகமாயினான்
ஆனைக் காவிலண்ணலை யபயமாக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவார்க் கேதுமேத மில்லையே. 3

ஊழியூழி வையகத் துயிர்கடோற்று வானொடும்
ஆழியானுங் காண்கிலா ஆனைக்காவி லண்ணலைக்
காழிஞான சம்பந்தன் கருதிச்சொன்ன பத்திவை
வாழியாகக் கற்பவர் வல்வினைகள் மாயுமே. 4

மண்ணது வுண்டரி மலரோன் காணா
வெண்ணா வல்விரும்பு மயேந் திரரும்
கண்ணது வோங்கிய கயிலை யாரும்
அண்ண லாரூராதி யானைக் காவே. 5

ஏன மாலய னவர்காண் பரியார்
கான மார்கயிலை நன்மயேந் திரரும்
ஆன வாரூராதி யானைக் காவை
ஞான சம்பந் தன்தமிழ் சொல்லுமே. 6

(2) திருநாவுக்கரசர் அருளியவை

## திருக்குறுந்தொகை

கோனைக் காவிக் குளிர்ந்த மனத்தராய்த்
தேனைக் காவியுண் ணார்சில தெண்ணர்கள்
ஆனைக் காவிலெம் மானை யணைகிலார்
ஊனைக் காவி யுழிதர்வ ருமரே. 1

ஓதமா கடல் சூழிலங் கைக்கிறை
கீதம் இன்னரம் பாடக் கெழுவினான்
பாதம் வாங்கிப் பரிந்தருள் செய்தங்கோர்
ஆதி யாயிடும் ஆனைக்கா வண்ணலே. 2

## திருத்தாண்டகம்

எத்தாய ரெத்தந்தை யெச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடா மேவர் நல்லார்
செத்தால் வந்துதவுவா ரொருவ ரில்லைச்
சிறுவிறகாற் றீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா வென்றன்
அத்தாவுன் பொற்பாத மடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியே னென்செய் கேனே. 3

ஊனாகி யுயிராகி யதனு ணின்ற
உணர்வாகிப் பிறவனைத்தும் நீயாய் நின்றாய்
நானேது மறியாமே யென்னுள் வந்து
நல்லனவுந் தீயனவுங் காட்டா நின்றாய்
தேனாருங் கொன்றையனே நின்றி யூராய்
திருவானை காவிலுறை சிவனே ஞானம்
ஆனாயுன் பொற்பாத மடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியே னென்செய் கேனே. 4

முன்னானைத் தோல்போர்த்த மூர்த்தி தன்னை
மூவாத சிந்தையே மனமே வாக்கே
தன்னானை யாப்பண்ணி யேறி னானைச்
சாதற் கரியானைத் தாதை தன்னை
என்னானைக் கன்றினை யென்னீசன் றன்னை
எறிநீர்த் திரையுக ளுங்கா விரிசூழ்
தென்னானைக் காவானைத் தேனைப் பாலைச்
செழுநீர்த் திரளைச் சென்றாடி னேனே. 5

மருந்தானை மந்திரிப் பார்மனத் துளானை
வளர்மதியஞ் சடையானை மகிழ்ந்தென் னுள்ளத்
திருந்தானை யிறப்பிலியைப் பிறப்பி லானை
இமையவர்தம் பெருமானை யுமையா ளஞ்சக்

கருந்தான மதகளிற்றி னுரிபோர்த் தானைக்
கனமழுவாட் படையானைப் பலிகொண் டூரூர்
திரிந்தானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச் சென்றாடி னேனே. 6

(3) **சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியவை.**

மறைக ளாயின நான்கு மற்றுள பொருள்களு மெல்லாந்
துறையுந் தோத்திரத் திறையுந் தொன்மையு நன்மையுமாய
அறையும் பூம்புன லானைக் காவுடை யாதியை நாளும்
இறைவ னென்றடி சேர்வார் எம்மையு மாளுடையாரே.

*தார மாகிய பொன்னித் தண்டுறை யாடி விழுத்தும்
நீரி னின்றடி போற்றி நின்மலா கொள்ளென வாங்கே
ஆரங் கொண்ட வெம்மானைக் காவுடை யாதியை நாளும்
ஈர முள்ளவர் நாளும் எம்மையு மாளுடை யாரே. 2

ஆழியாற் கருளானைக் காவுடையாதி பொன்னடியின்
நீழலே சரணாக நின்றருள்கூர நினைந்து
வாழவல்ல வன்றொண்டன் வண்டமிழ்மாலை வல்லார் போய்
ஏழுமா பிறப்பற்று எம்மையு மாளுடை யாரே. 3

* சோழன் காவிரியில் நீராடும்போது நழுவி விழுந்த முத்து மாலையை அவன் வேண்டிக்கொண்டபடியே பெருமான் திருமஞ்சனக் குடத்தின் மூலமாக ஏற்றுக்கொண்ட செய்தி இச்செய்யுளில் கூறப்பெற்றுள்ளது.

(4) **ஐயடிகள் காடவர்கோன் இயற்றிய க்ஷேத்திரத் திருவெண்பா.**

குழீஇயிருந்த சுற்றங் குணங்கள்பா ராட்ட
வழீஇயிருந்த வங்கங்க ளெல்லாந்—தழீஇயிருந்து
மென்றானைக் காவா விதுதகா வென்றுமுன்
தென்றானைக் காவடைநீ சென்று.

(5) **அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்.**

அம்புலி நீரைச் சூடிய
செஞ்சடை மீதிற் றுவிய
ஐந்தலை நாகப் பூஷண — னருள்வோனே

யன்புட னுவிற் பாவது
சந்தத மோதித் தாடனி
லங்கையி னுனற் பூசனை — புரியாமல்

அம்பணி யாரப் பூண்முலை
வஞ்சியர் மாயச் சாயலில்
வண்டுழ லோதித் தாழ்குழ — லிருகாதின்

மண்டிய நீலப் பார்வையில்
வெண்டுகி லாடைச் சேர்வையின்
மங்கிய வேழைப் பாவிய — னழிவேனோ

கொம்பனை நீலக் கோமள
வம்புய மாலைப் பூஷணி
குண்டலி யாலப் போசனி — யபிராமி

கொஞ்சிய வானைச் சானவி
சங்கரி வேதப் பார்வதி
குன்றருள் பாலிப் பேரிமை — யருள்பாலா

செம்பவ ளாயக் கூரிதழ்
மின்குற மானைப் பூண்முலை
திண்புய மார்பிற் பூரண — மணைவோனே

செந்தமிழ் வாணப் பாவலர்
சங்கிசை யாழைப் பாடிய
தென்றிரு வானைக் காவுறை — பெருமானே

(6) **காளமேகப் புலவர் பாடிய தனிப் பாடல்கள்.**

1. *சீரங்கத் தாருந் திருவானைக் காவாரும்*
*போரங்கமாகப் பொருவதேன்—ஓரங்கள்*
*வேண்டா மிதென்ன விவரந் தெரியாதோ*
*ஆண்டானுந் தாதனுமா னால்.*

2. *கல்லால் அடித்ததற்கோ காலால் உதைத்ததற்கோ*
*வில்லால் அடித்ததற்கோ வெட்கினீர்-சொல்வீரால்*
*மஞ்சுதனைச் சூழும் மதிலானைக் காவாரே*
*நஞ்சுதனைத் தின்றதென்முன்னுள்.*

(7) **தாயுமான சுவாமிகள் பாடிய பாடல்.**

*வட்ட மிட்டொளிர் பிராண வாயுவெனு*
*நிகள மோடுகம னஞ்செயும்*
*மனமெனும் பெரிய மத்த யானையையென்*
*வசமடக்கி டின்மும் மண்டலத்*
*திட்ட முற்றவள ராச யோகமிவன்*
*யோக மென்றறிஞர் புகழவே*
*ஏழையே னுலகில் நீடு வாழ்வன் இனி*
*இங்கிதற் கும் அனு மானமோ*

*பட்ட வர்த்தனர் பராவு சக்ரதர*
*பாக்ய•மானசுப யோகமும்*
*பார காவிய கவித்வ நான்மறை*
*பராயணஞ் செய்மதி யூகமும்*
*அட்ட சித்தி நலன்ப ருக்கருள*
*விருது கட்டிய பொன் அன்னமே*
*அண்டகோடி புகழ் காவை வாழும் அகி*
*லாண்ட நாயகியென் அம்மையே.*

## 20. தனி நூல்கள்

(1) **திருவானைக்காப் புராணம்.** இந்நூல் ஸ்ரீகச்சியப்ப முனிவரால் இயற்றப்பெற்றது; **21** படலங்களை உடையது. சொற்சுவை பொருட்சுவை பொருந்தியது.

## விநாயகர்

நிலம்போற்றும் பனிக்கிரண நிலாவணிந்த நாயகனுர் நிருதர் வாழுஞ்

சலம்போற்று மதில்பொடித்த ஞான்றினிய பூசனைகள் சால வாற்றிப்

புலம்போற்று மெய்யடியார் விநாயக னென் றியம்புபதப் பொருளை நாட்டி

வலம்போற்று மணியிரத மூர்ந்தமழ விளங்களிற்றை வணக்கஞ் செய்வாம்.

## ஜம்புநாதர்

மணிபூத்த நறும்பொகுட்டு மலர்த்தவிசு
நாகணையு மாகத் தும்பர்ப்
பணிபூத்த கயிலாய நெடுஞ்சிலம்பு
மொருமூவர் பணிந்து வைக
வணிபூத்த வவருளமுந் திருவானைக்
காவுமினி தமர்ந்தெல் லோர்க்கும்
பிணிபூத்த மலந்துரக்குஞ் சம்புநா
யகர்மலர்த்தாள் பேணி வாழ்வாம். 2

## அகிலாண்ட நாயகி

எண்ணிறந்த தாயர்வயிற் றிருந்துபிறந்
திடுந்துயர மெனைத்தும் நீங்க
மண்ணிறந்து புனலிறந்து வயங்கியசெந்
தீயிறந்து வளியி னோடு
விண்ணிறந்து பெருங்கருணைத் தாயாகித்
தனதகட்டின் விரவ வைத்துக்
கண்ணிறந்த கவின் காட்டும் அகிலாண்ட
நாயகியைக் கருத்துள் வைப்பாம். 3

## தக்ஷிணாமூர்த்தி

மும்மலம் வேறுபட் டொழிய மொய்த்துயிர்
அம்மலர்த் தாணிழ லடங்கு முண்மையைக்
கைம்மலர்க் காட்சியிற் கதுவ நல்கிய
செம்மலை யலதுளஞ் சிந்தி யாதரோ. 4

## முருகப் பெருமான்

இருமுது குரவர் நாப்ப ணிளமையோ டிருந்து சேயென்
றொருவரும் பெயரும் வேறே யொருவருஞ் சாமி யாகாக்
குருபர னிறைஞ்ச வுண்மை கொடுத்தொரு சாமி யென்னும்
பொருவரும் பெயரும் பூண்ட புனிதனைப் புகழ்ந்து வாழ்வாம்

## திருஞான சம்பந்தர்

மழலையின்ன முதூற்றெழ மாசைவள்ளத்துக்
குழலின் மென்மொழி யுமையவள் கொடுத்தபால் கமழப்
பழகு செந்தமிழ்ப் பாடலந்தேன் வடித்தாடு
மழகனஞ் செவியூட்டிய அறிஞனை யடுப்பாம். 6

## திருநாவுக்கரசர்

கொண்டலாடிய விழிகளுங் கோலவெண்ணீற்று
வண்டலாடிய மேனியு மல்குமானந்த
முண்டதாங் கெதிரெடுத்தென வோதுசெம் பாட்டுங்
கண்டு கேட்டருள் நாவினுக் கரசினைக் கலப்பாம். 7

## சுந்தர மூர்த்தியார்

அடிமை யானவர்க் கருளையுந் தன்னையு முயிரிற்
படியிலாவகை யளிப்பது பாருளோ ரறிய
வடிவின் மாண்டவ ளொருத்திதா தெனவிறை வழங்க
நொடியின் மாலைசெய் வன்றொண்டரடிமலர் நுவல்வாம், 8

## மாணிக்க வாசகர்

உளத்திற் றேக்கிய சிவானந்த வெள்ளமுட் பொசிந்து
வளத்திற் றேக்கிய தெனவெயர் பொடிப்பவான் மடையாற்
களத்திற் றேக்கிய தெனவிழிகாலவன் பிறைதாட்
டளத்திற் றேக்கிய வாதவூரடிகளைச் சார்வாம். 9

(2) தந்திவனப்புராணம். இதன் ஆசிரியர் கமலை ஸ்ரீ ஞானப் பிரகாசர் என்று சொல்லப்படுகிறது.

## சிவபெருமான்

1. சீர்கொண்ட விமயவல்லி செங்கதிரோன்
வெண்டிங்கட் சிலந்தியானை
தார்கொண்ட சதுர் முகத்தோன் தமிழ்ப்பொதிய
குறுமுனிவன் தருநற்றீர்த்தம்
கார்கொண்ட விறந்தருமால் விண்ணரசு
வன்னியொடு கருதியேத்த
ஏர் கொண்ட வெண்ணாவல் நிழல்மகிழுங்
கற்பகத்தை யிறைஞ்சு வோமே.

## அகிலாண்ட நாயகி

2. நகிலாண்ட மணிவடமும் நகைமுகமுங்
கருணைபொழி நயன வேலும்
துகிலாண்ட துடிமருங்குந் துடிக்கரமுங்
கொந்தளபொற் றோடுங் காதும்
முகிலாண்ட கருங்குழலுங் கருதுமடி
யவர்தமக்கு முன்னே தோன்றும்
அகிலாண்ட நாயகிதன் னடிமலரெம்
முடிமிசைமே லழுத்து வோமே.

## முருகன்

3. முந்துமுகப் புடனமுத முகிலாண்ட வளையாட
[முலைகளாட
இந்துமுக த்திய ராடியினிதேர் மணக்குன்றிலேறி மேய
நந்துமுகத்தண்டரள மணிகொழிக்குங் காவிரிசூழ்
[ஞானபூமி
ஐந்துமுகக்கடவுளருள் ஆறுமுகக் கடவுளையாமன்பு
[கூர்வாம்

4. ஆனையு மனுவுமொக்கு மருட்பெருங்
கடவுட் கென்றே
ஏனையோ ரெவர்க்குங் காட்டற்கெண்ணிய
வாறு போலச்
சேனைவெல் களிற்றினுக்குஞ் சிலந்திக்கும்
அருள்புரிந்தான்
மானையோர் பாகந்தன்னில் வைத்திடும்
சம்புநாதன்.

5. ஒன்பது மணிகளாலு மொளிபெறு சாலகத்தின்
ஒன்பது வாசல் வந்துறுவினை தீர்க்குந் தீர்த்தம்
ஒன்பது மிறைஞ்ச வோங்கு முமாபதி தன்னைக்
[காண்போர்
ஒன்பது தீர்த்த மாடுறுபயன் பெறுவா ரன்றே.

(3) **திருவானைக்கா திருப்பணிமாலை.** இது கோயிலின் புராதனப் திருப்பணியின் விவரங்களைத் தெரிவிப்பது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. 40 பாடல்களை உடையது.

வெண்ணாவ லீசற்கு நாலாம் பிரகாரம் வியன்மதிலுங்
கண்ணார் பொற்கோபுரமும் செய்வித்தான் கனகாலத்தின்
தண்ணார் மலர்ச் செண்டும் செங்கோலும் வையத்துத் தமிழ்
[கொழிக்கும்
பண்ணார்ந்த கூடலம் பதிவாழும் சுந்தர பாண்டியனே. 1

தண்ணோங்கு கொன்றைச் சடைச்சம்பு நாயகர்க்குத்
[தான்விளங்க
விண்ணோங்கு மண்டபமொன்று களவேள்வி விளங்கச் செய்தான்
பண்ணோங்கு செஞ்சொற்றமிழ் வாணர் நல்லிசை பாடல்
[கொண்ட
மண்ணோங்கிய புகழான் குலசேகர மன்னவனே. 2

சாற்றுந் தமிழ்க்காவைச் சங்கரற்குஞ் சங்கரிக்கும்
போற்றுஞ் சிகரம்பொன் பூசித்தான்—நாற்றிகழ்
செய்ய கமலத் திருமா மகள்புணையும்
அய்யனு ரிய்யரா யன். 3

சீரிய காவையில் வாழ் சம்புநாதர் சேயிழைக்கு
வீரியமான பூதவாகனமே விளங்கச் செய்தான்
பேரியலான கிளிவாகன மொன்று பிரபலமாய்
நாரிநற்பாக னடியான் நித்தியானந்த நாரண தீக்ஷிதனே 4

குறிப்பு :- தந்திவனப் புராணச் செய்யுட்களும், திருப்பணி மாலைப் பாடல்களும் ஓதுவார் திரு. காத்தபெருமாள் பிள்ளை அவர்கள் மூலம் கிடைத்தன.

(4) திருவானைக்கா உலா. இது காளமேகப்புலவரால் இயற்றப் பெற்றது. 460 கண்ணிகளைக் கொண்டது.

ஏரானைக் காவி லுறை யென்னானைக் கன்றளித்த
போரானைக் கன்றதனைப் போற்றினல்—வாராத
புத்திவரும் பத்திவரும் புத்திரசம் பத்துவருஞ்
சத்திவருஞ் சித்திவருந் தான்.

மெய்த்திறலோன் வில்லடியு மீனவன்கை மாறடியும்
புத்தனெறி கல்லும் பொறுத்தநீர்—முத்தமிழோர்
செஞ்சொற் றனைவிரும்புஞ் செம்புநா தாவடியேன்
புன்சொற் றனையும் பொறு.

*   *   *   *

க்ண்ணுதற்கு விண்ணோர் தங்காவின் மலர்பறிக்க
நண்ணுதற்குப் போனகண நாதர்களி—லெண்ணு

மனப்புட்ப வந்தனுடன் மாலிய வான்ருனு
மினப்புட் பமாருடி யேந்திச்—சினத்திறைற்

றம்மைத்தான் சாபித்துச் சார்பான சம்புதலத்
தெம்மைப்பூ சித்துய்மி னென்றுவிட—வம்முறையே

வெள்வரையிற் புட்பவந்தன் வெள்ளானை யாய்ப்பிறந்து
வள்ளலைவெண் ணுவல்வாய் வந்திறைஞ்சித்—துள்ளிய

மாலிய வானு முருமாறிச் சிலந்தியாய்க்
கோலியவெண் ணுவற் குடிகொண்டு—நூலிழைத்து

நாதன் சடைமுடிமே ஞுவற் சருகுதிரா
வேதங் கெடப்பந்த ரிட்டுவர—போதங்கண்

டங்கையாற் றள்ளிநீ ராட்டியருச் சித்தேகப்
பொங்கவர்வா முஞ்சிலந்திப் போதமுனிந்—தங்கொளித்து

யானிட்ட பந்த ரிதுவோ தவிர்ப்பதென
மாநெட்டை வேழம் வருமளவுந்—தானெட்டி

வேய்த்திருந்த நஞ்சமென மீன்மிடற்றிற் றாண்டிலெனப்
பூத்திருந்து பூட்கை புகப்பெரு—தாய்த்திறலின்

மிக்க க்ளிறலறி வீழச் சிலந்தியுமங்
கொக்க விறக்க வுமைபாக—ரக்கணமே

வாருமென வெழுப்பி வாரணத்துக் கப்பொழுது
சேருஞ் சிவலோகச் சீரருளி...யூரின்பேர்

ஆனைக்கா வாக்கி யருளச் சிலந்தியடி
யேனைக்கா பின்புநா ளிப்புவிக்குக்—கோனுகி

நின்னடிமை செய்யவரு ணீயென்ன மாலியவான்
சொன்னபடித் தில்லைவாய்த் தொல்லைமுடிச்—சென்னி

யினிய சுபதேவ னெண்டொடித்தோ டோய்ந்த
வனிதையரிற் புட்பவதி வாழத்—தனிமகவாய்ப்

போதுவித்துச் செங்கண்ணு ரென்னும்பேர் பூண்பித்துச்
சோதி மணிமகுடஞ் சூட்டுவித்துக்—காதலாய்த்

த்ன் ஞூலிற் பந்தரிட்ட தானத்திற் ருணுவுக்குப்
பொன்னிஞற் கோயிற் புதிதமைப்பித்து

*   *   *   *

(5) **அகிலாண்டநாயகி மாலை.** இது திரிசிரபுரம் மகா வித்வான் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்களால் இயற்றப் பெற்றது. 101 செய்யுட்களைக் கொண்டது

நீயெனப் பெருமான் விரும்பியோர் தினத்து
நிகழ்தரப் பொலிவதும் புவிக்குத்
தாயெனப் படுநீ யவனெனப் பொலியுந்
தன்மையும் வேறலே மென்று
சேயெனப் படுபல் லுயிர்க்கெலா முண்மை
தெரிப்பது போலுமீ தருளே
காயெனப் பவமுற் றகழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. 1

உலகிடை யழுத பிள்ளைபால் குடிக்கு
முண்மை யென் றுரைப் பதற்கேற்ப
இலகு சீகாழி மழவழ வளித்தா
யின்முலைப் பாலழா விடினும்
அலகற விரங்கி யளிப்பவ ரிலேயோ
அத்தகு மழவியா னருள்வாய்
கலகமில் கழகஞ் சூழ்திரு வானைக்
காவகி லாண்ட நாயகியே. 2

(6) **அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ்.** இதுவும் மேற்படி ஆசிரியர் மகாவித்துவான் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்களால் இயற்றப் பெற்றது.

ஒன் றுந்திமிரக் கருள ற வென்னுள்ளத்
தொளிறு மொளி விளக்கே
யுருகிப்பெருகுங் கண்ணீரென் னுதகி
யழுந்திப் பதை பதைத்துக்

கன்றுமடியா ருளத்தின்பங் கனியக்
கனியு மெய்ஞ் ஞானக்
கனியே நனியா நவரசமுங்
கலந்து காட்டுஞ் செழுந்தேனே

என்று புரையுமணிப் பொறைகொண்டெழும்
பூங்கொம்பே யிரைத் தெடுக்கு
மின்பப் பெருக்கே முருக்கவிர் மெல்லிதழ்ப்
பூங்குயிலே யிமைக்கு மம்பொன்
மன்றுணடனத் தனையாட்டு மயிலே
வருக வருகவே
மதமா தங்க வனத்து மடமானே
வருக வருகவே. 1

பொன்னே வருக மூவுலகும் பூத்தாய் வருக நாயேனைப்
புரந்தாய் வருக வழுதியர்கோன் புதல்வீ வருக முகிற்கிளைய
மின்னே வருக மெய்ஞ்ஞான விளக்கே வருக மறைநான்கின்
விரிவே வருக பேரின்ப விளைவே வருக மிகுங்கருணை

யன்னேவருக அகநெகுவார்க் கணியே வருக வலர்மடவார்க்
கரசே வருக வுரைப்பருஞ் சீரம்மே வருக வழற்கரத்து
மன்னோருடலம் பகிர்ந்தவிள மயிலே வருக வருகவே
மதமா தங்க வனத்துமட மானே வருக வருகவே 2

(7) திருவானைக்காப் பதிற்றுப்பத்தந்தாதி. இது திரு. K. V. சுப்பையர் அவர்களால் இயற்றப்பெற்றது. 100 செய்யுட்களை உடையது.

சிந்திக்க வரமருளுந் திருவானைக்
காவடிக டினமு நெஞ்சே
வந்திக்க மலர்க்கரமும் வாழ்த்தபசுந்
தமிழ்வாக்கும் வணங்க மெய்யும்

பந்திக்கத் தலையன்பும் பரிந்தளித்தும்
அவன்மலர்த்தாட் பரவா தந்தோ
நிந்திக்க வுடற்குழைக்கு நின்செய்கை
விழற்கிறைத்த நீர தன்றே. 1

அமுதேச ஞான தலவாச தும்பி
யகிலாண்ட வல்லி யயன்மால்
குமுதேசன் பானு முனிகோத மன்வண்
குறுமாத வத்தன் முதலாஞ்

சமுதாய மான தவரால் வணங்கு
தலைவாமி குத்த வவரன்
பிமியேனு மின்றி யிறுமாந் திருக்கு
மெளியேனு முய்ய வருளே. ௫

(8) **ஸ்ரீ மாத்ருகா புஷ்பமாலா துதி.** ஸ்ரீ அகிலாண்ட நாயகி அம்மையை வர்ணித்து ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதர்கள் இயற்றியது. வடமொழி எழுத்துக்களின் வரிசையில் அமைந்தது. மந்திர சாஸ்திரக் கருத்துக்களும், பக்தியும் பொருந்தியது.

इच्छाज्ञानसमस्तशक्तिसहिते इन्दीवरश्यामले
इन्द्रोपेन्द्रवरप्रदे इभवनाधीशे इनाराधिते ।
इज्ये इन्दुनिभानने इभनुते इष्टार्थसिद्धिप्रदे
इन्द्राणीनमिते इभाननसुते वन्देऽखिलाण्डेश्वरि ॥

**இதன்பொருள் :-** இச்சா சக்தி, ஞானசக்தி, கிரியா சக்தி ஆகிய மூன்று சக்திகளோடும் கூடியவளே. நீலோற்பலம் போன்ற நிறம் பொருந்தியவளே. இந்திரனுக்கும், உபந்திரனுக்கும் வரங்களைக் கொடுப்பவளே கஜாரண்ய க்ஷேத்திரத்திற்குத் தலைவியே சூரியனால் பூஜிக்கப் பெற்றவளே. யாக சொரூபமாயிருப்பவளே. யானையால் வழிபடப் பெற்றவளே வேண்டுவார் வேண்டும் பொருள்களைக் கைகூடச் செய்பவளே. இந்திராணியால் வணங்கப் பெற்றவளே. யானைமுகனைப் பிள்ளையாகக் கொண்டவளே. ஸ்ரீ அகிலாண்ட நாயகியே, உன்னை வணங்குகின்றேன். 1

उद्यद्भानुसहस्रकोटिकिरणे उर्वीधरेन्द्रात्मजे
उत्फुल्लाम्बुजलोचने उभयकावेर्यन्तरालाश्रये ।
उद्यच्चन्द्रनिभानने उरुतरे उच्चासने उज्ज्वले
उद्दामद्युतिपुञ्जमञ्जुलतरे वन्देऽखिलाण्डेश्वरि ॥

**பொருள் :-** ஆயிரம் கோடி சூரியர்களைப்போன்ற கிரணங்களை உடையவளே. மலையரசனது புதல்வியே. இதழ்கள் மலர்ந்த தாமரை போன்ற கண்களை உடையவளே. இரண்டு காவிரிக்கும் இடையிலுள்ள இடத்தை இருப்பிடமாக அமைத்துக்கொண்டவளே. உதய சந்திரனைப்போன்ற முகத்தை உடையவளே. மிகவும் சிறந்தவளே. உயர்ந்த பீடத்தில் ஒளிர்பவளே. அளவிட முடியாத ஒளித் தொகுதியால் உள்ளத்தைக் கவர்பவளே. ஸ்ரீ அகிலாண்ட நாயகியே உன்னை வந்திக்கின்றேன். 2

लूताधीशगजेन्द्रपूजितपदे लूनाहितेशान्विते
क्लींकाराङ्कितबिन्दुपीठनिलये क्लींकाररूपेडिते ।
लूतातन्तुजडीकृतेशनिलये लूनाहिवल्लीदले
लूताक्ष्मापतिमुक्तिदातृमहिले वन्देऽखिलाण्डेश्वरि ॥

**பொருள் :-** சிறந்த சிலந்தியாலும், யானையாலும் பூஜிக்கப் பெற்ற திருவடிகளை உடையவளே. அடியாரின் தீமைகளைப் போக்குபவளே. ஈசனுடன் சேர்ந்திருப்பவளே. க்லீங்காரத்துடன் பொருந்திய பிந்து பீடத்தை இடமாகக் கொண்டவளே. க்லீங்கார சொரூபமாய்த் துதிக்கப் பெற்றவளே. சிலந்தியின் வலையால் குளிர்ச்சி பொருந்திய ஈசனிடம் சேர்ந்திருப்பவளே. தாம்பூலத்தைக் கையில் தாங்கியவளே. சிலந்திக்கு வீடளித்த சிவனாரின் மனைவியே. ஸ்ரீ அகிலாண்ட நாயகியே, உன்னை வணங்குகின்றேன். 3

॥ श्रीः ॥

# ॥ श्रीजम्बूनाथाष्टकम् ॥

# 9. ஸ்ரீ ஜம்புநாதாஷ்டகம்

ஸ்ரீதர வெங்கடேசுவர அய்யாவாள் அவர்கள் இயற்றியது.

---

1. कश्चन जगतां हेतुः कपर्दकन्दलितकुमुदजीवातुः ।
जयति ज्ञानमहीन्दुर्जन्ममृतिक्लान्तिहरदयाबिन्दुः ॥

*உலகனைத்துக்கும் காரணமாகவும், சடைமுடியில் சந்திரனை அணிந்துகொண்டும், பிறப்பு இறப்பு என்ற கஷ்டத்தைப் போக்கும் கருணாரஸ பிந்துவை உடையதும் ஞானபூமி என்ற திருவானைக்காவலில் சந்திரன்போலவும் ஒன்றுவிளங்காநிற்கிறது*

2. श्रितभृतिबद्धपताकः कलितोत्पलवनमदोद्रेकः ।
अखिलाण्डमातुरेकः सुखयत्वस्मांस्तपःपरीपाकः ॥

*அண்டிய அடியார்களைக் காப்பதில் கொடி நாட்டியவரும், உத்பலவனத்திற்கு ஆனந்தத்தை யளிக்கும் சந்திரனை முடியில் தாங்கியவரும், உலகத்தாயான அகிலாண்டேச்வரியின் தவப் பயனாக விளங்குபவருமான ஒருவர் நம்மையும் களிக்கச் செய்யட்டும்*

3. कश्चन कारुण्यझरः कमलाकुचकलशकषणनिशितशरः ।
श्रीमान्दमितत्रिपुरः श्रितजम्बूपरिसरश्चकास्तु पुरः ॥

*லக்ஷ்மீகாந்தனை விஷ்ணுவை அம்பாக வைத்து திரிபுராசுரனை ஸம்ஹாரித்தவரும், அழகு பொருந்திய அபூர்வமான ஓர் காருண்ய அருவியுமான ஜம்புகேச்வரர் என் முன்னே தோன்றட்டும்.*

4. शमितस्मरदवविसरश्शक्राद्याशास्यसेवनावसरः ।

करिवनघनभाग्यभरो गिरतु मलं मम मनस्सरश्शफरः ॥

மன்மதனுகிற காட்டுத் தீயின் பரவுதலைத்தணித்தவரும், இந்திரன் முதலானவர்களால் ஸேவா ஸமயத்தை எதிர் பார்க்கப் படுகிறவரும், கஜாரண்யத்தின் பெரும் பாக்கியம் போன்றவரும், எனது மனதாகிற தடாகத்தில் மீன்போலிருந்து மனதிலுள்ள அழுக்கை அகற்றட்டும்.

5. गृहिणीकृतवैकुण्ठं गेहितजम्बूमहीरुडुपकण्ठम् ।

दिव्यं किमप्यकुण्ठं तेजःस्तादस्मदवनसोत्कण्ठम् ॥

மஹா விஷ்ணுவை (பிக்ஷாடன காலத்தில்) மனைவியாக ஆக்கிக்கொண்டதும், நாவல் மரத்தடியை இருப்பிடமாகக் கொண்டதும், எங்கும் தடையின்றி ப்ரகாசிப்பதுமான திவ்ய தேஜஸ் நம்மைக் காப்பதில் ஆவல் கொண்டதாக இருக்கட்டும்.

6. कृतशमनदर्पहरणं कृतकेतरफणितिचारिरथचरणम् ।

शक्रादिश्रितचरणं शरणं जम्बूद्रुमान्तिकाभरणम् ॥

யமனது திமிரை அடக்கியவரும், திரிபுர ஸம்ஹாரத்தில் வேதங்களில் உலவும் ஸூர்யமூர்த்தியை தேரின் சக்ரமாக உடையவரும், இந்திரன் முதலியவர்களால் பாதங்களில்பணியப்பெற்றவரும், ஜம்பூ மரத்தினருகே அணியாக விளங்குபவருமான பெ மானே சரணம்.

7. करुणारसवारिधये करवाणि नमः प्रणम्रसुरविधये ।

जगदानन्दथुनिधये जम्बूतरुमूलनिलयसन्निधये ॥

கருணைக்கடலானவரும், தேவர்களாலும் பிரும்மதேவனாலும் வணங்கப் பெற்றவரும், உலகின் ஆனந்தத்திற்கு இருப்பிடமானவரும், நாவல் மரத்தினடியில் ஸாந்நித்யம்பெற்று இடமாகவும் கொண்டிருப்பவருமான ஜம்புகேச்வரருக்கு நமஸ்காரம்.

8. कश्चन शशिचूडालं कण्ठेकालं दयौघमुत्कूलम् ।
श्रितजम्बूतरुमूलं शिक्षितकालं भजे जगन्मूलम् ॥

சந்திரனை சடையிலணிந்தவரும். நஞ்சைக் கண்டத்தில் கியவரும், கரைபுரண்ட கருணைக்கடலாயிருப்பவரும், கால காலால் உதைத்தவரும், உலகிற்குக் காரணருமான நாவல் ம தடியை அடைந்திருக்கும் ஒரு பரம்பொருளை பஜிக்கின்றேன்.

॥ श्रीजम्बूनाथाष्टकं संपूर्णम् ॥

ஸ்ரீ ஜம்புநாதாஷ்டகம் முற்றிற்று.

---

அருள்வளர் சம்புமூலத் தமுதலிங்கேசர் வாழ்க
வருமகி லாண்டவல்லி வாழ்கவே தாகமத்தின்
பொருணிலைவழாது வாழ்க புகழ்திரு வானைக்காவாம்
திருநகர் வாழ்கவாழ்க தேயங்களனைத்து மாதோ.

அறந்தருங்காவை வாழி யகிலாண்டவம்மை வாழி
நிறைந்திடு மனைத்துக் கொத்தும் நிலமிசைவாழிபாசம்
துறந்திடும் உலகநாதன் துலையில் மெய்ப்புகழே வாழி
சிறந்திடு சம்புநாதன் திருவடி வாழிவாழி.

"ஆனைக்காவல் அண்ணல் திருவடிபோற்றி"

---

PUBLIC LIBRARY
26 SEP 1956
MADRAS
P.70.P.C.7
14